இ.இ.வெ. 51. கு. வி. 12:

18

குர் ஆன்
1952 க்குப் பொருந்துமா?

என்று



ஈ. வே. ரா. பெரியார் கேட்டதற்கு பதில்.

by
'குலாம்',
இஷாத்தே இஸ்லாம்
பதிப்பகம்,
ஆத்தூர்,
(சேலம்).

QURAN
Will It Suit 1952 ?

Published by
PEACE PROPAGATION PUBLISHERS,
Atur, Salem.
1953

விலை 0-8-0

இஷாத்தே இஸ்லாம் வெளியீடுகள்.

இ. இ. வெ.			விலை அணு
1	பள்ளு பறையர்		4
2	பாரத குமாரி-விபசாரியா-பிசாசா?	[யி அறியாமை1	12
3	இஸ்லாத்தை ஒழிக்க முடிவு or திரு S. குஞ்சிதம் B.A.,L.T.,		2
5	உலக சமாதானத்துக்கு வழிகாட்டி நடாத்த வல்லவர் யார்? கைநாட்டரபியா? மகாத்மா காந்தியா?		6
6	ஸோஷியலிஸ கர்த்தா யார்? மார்க்ஸா? முஹம்மதா?		8
7	அல்லா அநியாயக்காரனல்லவா?	16 வினு விடை அடங்கியது	4
8	ஸினிமாவில் நடிக்கலாமா? ...	25 ,,	4
9	துலுக்கன் யார்? திராவிடனு?		3
10	இரண்டு மனைவிகளை மணக்கவும்	10 ,,	3
11	திராவிட இயக்கம் வெற்றி பெருது	,,	3
12	மதுவிலக்கு வெற்றி பெறுமா?	4 ,,	3
13	குர்ஆன் விளக்கம்		15
14	ஹதீஸ் விளக்கம் II		10
15	அஸ்ஸலாமு அலைக்கும்	,,	2
16	தக்னியும்-லெப்பையும்-இஸ்லாமும்	9 ,,	4
17	திராவிடர் மதம் இஸ்லாம் தானு? OR சுயமரியாதைக்காரர்		2
18	80 சன்மார்க்க வினுக்கள்	[கள் நாஸ்திகர்களல்லவா?	3
19	இறுதி ஜகத் குரு சரித்திரம் I	(அச்சில்)	
20	118 பகுத்தறிவுப் பயிற்சி வினுக்கள்		4
21	திராவிடர் தலைவர்களுக்கு இஸ்லாத்தில் சேர அழைப்பு		1
22	முஸ்லிம்பெண்கள் விபசாரதோஷமுள்ள அடிமைகள்தானு?		8
23/1	ரம்ஜானும்-கஞ்சிக்கு சண்டையும்	×	இனும்
23/2	ஜக்காத்தும்-பிச்சைத் தொழில் வளர்ச்சியும்	×	இனும்
24	204 சன்மார்க்க வினுக்கள்		6
25	இஸ்லாம் மதமும் ஏன் ஒழியவேண்டும்?		8
26	கடவுள் இல்லை. உண்டென்றால் உணர்வதெப்படி?		2
27	கமால் இஸ்லாத்தைத் துருக்கியில் ஒழித்து விட்டார் . . .!		4
28	முஸ்லிம்கள் ஏன் திராவிட இயக்கத்தில் கலந்துகொள்ள		1
29	இஸ்லாம் மதம் செத்த மதம் . . .!	[வேண்டும்?	4
20	வைப்பாட்டிக்கு குர்ஆன் அனுமதி உண்டா?	குர்ஆன் விளக்கம்	2-16
31	கடவுள் என்பதைப் பற்றிய பெரியாரின் அறியாமை		8
32	எது வியபிசாரம் — —?	(கு.வி.3)	12
33	கடவுள், இஸ்லாம் & பெரியார் [என்ன சொல்லுகின்றூர்?		5
34	விஞ்ஞானம் கண்ட கடவுள்-இதுபற்றி ஈ.வெ.ரா.பெரியார்		5
35	யார் காபிர்? யார் முஸ்லிம்?	(கு.வி.4)	10
36	ஹிந்து மதமும் இஸ்லாமும் ஒழிய வேண்டும். ஏ?		8
37	ஒருவனுக்குப் பல புருஷர்கள்-ஏன் கூடாது?		5
38	முஸ்லிம்கள் ஹிந்துவாகி விடவேண்டும்—		8

(தொடர்ச்சிக்கு ராப்பர் 3ம் பக்கம் பார்க்கவும்)

குர்ஆன்
1952க்குப் பொருந்துமா?
என்று கேட்ட
ஈ. வெ. ரா. பெரியாருக்கு
இஷாத்தே இஸ்லாம் பதிப்பகமும்,
ஆத்தூர் ஆஸ்திக சங்கமும்;
குர்ஆன் 1952 க்குப் பொருந்தாது
என்பதையும்
கடவுள் இல்லை
என்பதையும்
நிரூபிக்கும்படி கேட்டெழுதிய
இருபகிரங்கக் கடிதங்களாவன.

—★—

ஈ. வெ. ரா.
பெரியார் அவர்களுக்கு.

பெரு மதிப்புக்குரிய ஐயா! சலாம். தாங்கள் அக்டோபர் 10, 11 தேதிகளில் நம்மூரில் நடக்க இருக்கும் சு. ம. & தி. இயக்க மகா நாட்டுக்குத் தலைமை வகிக்க வருவதாக செய்தி.

எங்கள் ஆத்தூருக்குத் தங்கள் வரவு நல்வரவு ஆகுக.

> 'திராவிடர்களுக்கு மட்டுமல்ல; உலகனைத்துக்கும் எல்லா இழிவுகளும் ஒழிய இஸ்லாம் ஒன்று தான் கைகண்ட நன் மருந்து, வேறு மருந்து உண்டானால் காட்டுங்கள்'

என்று ஹிந்து—கிறிஸ்து—புத்த—ஆர்ய முதலிய எல்லா மதத்தினருக்கும் சவால் விட்டு வந்தீர்கள். ஆனால், சமீப காலமாக குறள் மதத்தையும், பின்னர் புத்த மதத்தையும் சிபாரிஷ் செய்து வருகின்றீர்கள். இது பற்றி நாங்கள் இஞ்சிற்றும் கவலைப்படவில்லை. ஆனால், அதே சமயத்தில் இஸ்லாம் மதத்தையும் ஒழிக்கப்பட வேண்டிய மதப்பட்டியலில் சேர்த்துப் பிரச்சாரம் செய்து வருகின்றீர்கள். இதை ஒட்டி,

குர்ஆன் 1952 க்குப்
பொருந்துமா?

என்று அறை கூவினீர்கள்.

இந்த சவாலை ஏற்று தர்க்க ரீதியாய் தங்களுக்கு,

குர்ஆன் 1952 க்குப்
பொருந்துமா?

என்ற நூலில் ஜவாப் அளித்துள்ளோம்.

இந்த நூலைத் தங்களுக்குத் தனித் தபால் மூலியமாக சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றோம்.

இஸ்லாத்தை ஒழிக்கத் தாங்கள் காட்டும் ஒரே காரணம், அதில் 'கடவுள் உண்டு' என்ற

(மூட?)நம்பிக்கை இருப்பதாலேயேயாகும்.

'கடவுள் இல்லை
என்று நிரூபியுங்கள், அல்லது
கடவுள் உண்டு
என்பதை நாங்கள் நிரூபிக்
கின்றோம்'

என்று தங்களைக்கேட்டு ஆத்தூர் ஆஸ்திக சங்கத்தினர் 10-ம் தேதியில் தங்களுக்கோர் கடிதம் எழுதியுள்ளனர்.

அக்கடிதத்தில் கண்டபடி தங்களிஷ்டத்துக்கு, தாங்கள் குறிக்கும் இடம் நேரத்தில், தங்கள் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டுத் தங்களை சந்தித்து விளக்கம் பெற சித்தமாயுள்ளோம்.

நாங்கள் தங்கள் வரவை இதற்காக ஆவலுடன் எதிர் பார்த்துள்ளோம். நாங்கள் ஏமாறுதபடி தங்களை சந்தித்து விளக்கம் பெறும்படி செய்வீர்கள் என்று நம்பி காத்திருக்கின்றோம்.

இரண்டாம் தடவையாக,

குறளும்—குர்ஆனும்,
புத்த மதமும்—இஸ்லாமும்,
விஞ்ஞானம் கண்ட கடவுள்,
கடவுள் என்பதைப்பற்றிய பெரியாரின் அறியாமை,
கடவுள்-இஸ்லாம்-பெரியார்,
ஹிந்து மதமும் இஸ்லாமும் ஒழிய வேண்டும், ஏன்?

என்ற எங்கள் வெளியீடுகளை விவாதத்துக்கு முன் தங்கள் பரிசிலனைக்காக தனித்தபாலில் அனுப்பியுள்ளோம். சலாம்.

இப்படிக்கு, 'குலாம்',
இ.இ. பதிப்பகம் சார்பாக.

—✶—

நாஸ்திகர் தலைவருக்கு ஆத்தூர் ஆஸ்திக சங்க அழைப்பு.

நாஸ்திகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு.

மதிப்புக்குரிய ஐயா! வணக்கம்.

எங்கள் 'ஆத்தூர் ஆஸ்திக சங்க'த்தின் நோக்கமும், ஆஸ்திகம் என்றால் என்ன? என்ற விளக்கமும் (எங்கள் சங்க) இக்கடிதத்தின் மார்ஜினில்* குறிக்கப்பட்டுள்ளன.

எங்கள் வியாக்கியானப்படியும், தங்கள் கூற்றுகளை நாங்கள் உணர்ந்துள்ளதிலிருந்தும் நாஸ்திகம் என்றால் (எங்கள் ஆஸ்திக அடிப்படையை, அதாவது) கடவுளை மறுப்பதாகும். என்றாலும்,

"கடவுள் இல்லை என்ற கயவன் யார்? சர்வ வல்லமையுள்ள கடவுள் உண்டு என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் 'கடவுள் பற்றிய கற்பனைகளையே எதிர்க்கிறேன். இதற்காக என்னையும் திராவிட கழகத்தின

* அங்கிங்கெனாதபடி எங்குமாய், அரூபியாய் உள்ள கடவுள் நம்பிக்கை கொண்டவர்களனைவரும் ஆஸ்திகர்களே. இவர்களனைவரும் இச்சங்கத்தில் இடம் பெறலாம்.

நோக்கம்: நாஸ்திகத்தின் சமூக தேச துரோக வேலைகளையும், ஆஸ்திகர்களிடையில் வளர்ந்து வரும் நாஸ்திகத்தையும் கண்டித்து, தேசத்தில் சமாதானத்தை வளர்க்கச் செய்வதே.

182109

ரையும் நாஸ்திகர்கள் என்று சொல்லிவிட முடியுமா?"

என்று தாங்கள் அடிக்கடி சவாலும் விடுகின்றீர்கள்.

இதை ஒட்டியே எங்கள் சங்கத்துக்கு வந்து விவாதிக்கும் தி. க. ஆத்தூர் நகர & தாலுகா தலைவர்கள், முறையே, பொன்னையா, இசையழகன் முதலிய அனைவரும் ஆஸ்திகத்தை அதாவது கடவுள் ஒன்று உண்டு என்பதை ஏற்றுக்கொண்டு செல்வதும், பின்னர் குழப்பிக் கொள்வதுமாய் இருக்கின்றனர். ஆகையால், கடவுள் இல்லை என்பதே உங்கள், உங்கள் சுயமரியாதை இயக்கத்தின் வாதமானால், தாங்கள் அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் எங்கள் ஊர் சுயமரியாதை & தி. க. மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வரும் பொழுது, நாங்கள் தங்கள் ஜாகைக்கு தங்கள் இஷ்டத்துக்கு ஒரு சில பார்வையாளர் முன் விவாதித்து உண்மையை உணர்ந்துகொள்ள ஆவலாய் உள்ளோம்.

ஷெ மகாநாட்டுக்கு மூலபுருஷராய் உள்ள இத்தாலுகா தி. க. தலைவர் S. V. பொன்னையா அவர்கள் இதற்கு ஏற்பாடு செய்து தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். இவர் மூலியமாகவோ, அல்லது எங்களுக்கு நேராகவோ தங்கள் இஷ்டத்தை தெரிவிக்க வேண்டுகின்றோம். இதன் நகல் ஒன்றை S. V. பொன்னையாவுக்கும், 'நம்மூர்' & 'இ. இ.' ஆசிரியருக்கும் அனுப்பியுள்ளோம். இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,
M. நாராயணசாமி பிள்ளை,
10-9-53 For ஆ. ஆ. சங்கம்.

மேலே கண்ட எங்கள் அழைப்பை ஏற்று பெரியாருடன் விவாதம் நடந்தால், அதன் விபரங்கள் அடுத்த திருத்திய பதிப்பில் கொடுக்கப்படும்.

அவசரமாக இந்நூல் தொகுக்கப்பட்டதாலும், அச்சகத்தின் குறையாலும் இந்நூல் திருப்தியாக அமையவில்லை; பலவித குறைகளைக் காண்பீர்கள். இதற்காக வருந்துகின்றோம். அடுத்த பதிப்பில் இக்குறைகள் களையப்படும். இஸ்லாமைப்பற்றி எந்த திராவிட இயக்கத்தினர் குறை கூறினாலும், இந்நூலை அவருக்கு அவருடைய அறியாமையைப் போக்க இனமாக விநியோகித்து உண்மை இஸ்லாம் என்ன என்பதை உணர்த்துவீர்களாக. திராவிட இயக்கத்தினர்கள் இஸ்லாமைப் பற்றிக் கூறும் குறைகளுக் கெல்லாம் குலாமவர்கள் அவ்வப்பொழுது தர்க்க ரீதியாய் பதிலளித்து புத்தக ரூபமாகவும் வெளியிட்டுள்ளார்கள். அவைகளை இ. இ. வெ. பட்டியலில் காண்பீர்கள். அவைகள் உங்களிடம் இருந்தால், இஸ்லாத்தின் எதிரிகளின் ஒவ்வோர் தாக்குதலுக்கும் தக்க பதிலளிக்கலாம்.

(இ. இ. ப.)

குர்ஆன்

1952 க்குப் பொருந்துமா?

பொருந்தாது — 'ஈ. வெ. ரா.'

எக்காலத்துக்கும் பொருந்தும் —

'குர்ஆனும் முஸ்லிம்களும்'

எது சரி?

....★....

'முஸ்லிம்கள் மட்டுமல்ல, அல்லாதாரும், இந்தப் பிரச்னை என்றென்றைக்கும் எழுந்துகொண்டே இருக்கக் கூடியதாகையால், இஷாத்தே இஸ்லாம்' மாதத்தாளில் வெளியாவதைத் தொகுத்து புத்தக ரூபமாய்க் கொடுக்கும்படி பலர் யோசனை கூறி வருவதை மதித்து இது வெளியிடப்படுகின்றது. (இ. இ. ப.)

'1500 வருடத்திற்கு முன் நபி சொன்னவைகள் அத்தனையும் இன்றைக்கும் அப்படியே பொருந்தும் என்றால் விஞ்ஞானியால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்?''

இப்படிக் கேட்பவர், நாஸ்திக இயக்கமாகிய சுயமரியாதை & திராவிட இயக்கத் தலைவர் ஈரோடு பெரியார் எனப்படும் ஈ. வெ. ராமஸ்வாமி நாயக்கர். இப்படி இவர் 24—8—52 ல் திருச்சியில் பஹிரங்கமாக சவால் விட்டுக் கேட்டுள்ளார். 27/28—8—52 விடுதலை பார்க்கவும்.

"ஒரு உண்மை கிறிஸ்துவன் என்கிறவனும் (ஹிந்துவைப் போலவே) இயேசுவை அடைந்தால் சகல பாவமும் தீர்ந்துவிடும் என்கின்றான். அன்றியும் ஏசுவின் மூலம் அல்லாமல் பாவ மன்னிப்பு என்பது கிடையவே கிடையாதென்கின்றான். அதுபோலவே ஒரு முகமதியனும் குர்ஆன் வாக்கெல்லாம் கடவுள் வாக்கு, அது எந்த தேசத்திற்கும் பொருந்தியது. அதில் உள்ள ஒரு சிறு கோடாவது மாறினால் இஸ்லாம் மதமே போய் விட்டது என்கின்றான்''

என்று எழுதியவரும் அந்தப் பெரியாரே. 28-7-29 'குடி அரச'ப் பத்திரிகையைப் பாருங்க

ள்.[1] 31-8-52 'விடுதலை'யிலும் இதைப் பார்க்கலாம்.

இஸ்லாத்தைத் தாக்கும் பொழுதெல்லாம் இதைத் தான் குறிப்பிட்டு வருகின்றார். இத்துடன், பெண்களை இஸ்லாம் கோஷா வென்ற பெயரால் அடிமைப் படுத்தியிருக்கின்றது[2] என்பது இவர் இஸ்லாத்தின்பேரில் சுமத்தும் மற்றோர் குற்றச் சாட்டு.

குருவை ஒட்டி இவருடைய சிஷ்யர்களும் இக்குற்றச் சாட்டுகளை அடிக்கடி கூறிக் கொண்டே உள்ளனர். சமீபத்தில் திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளிகளில் ஒருவரான இரா.நெடுஞ்செழியன் M.A., என்பவர் கூட சென்னை குசப்பேட்டையில் 17—8—52ல் பேசுகையில்,

"குர்ஆன் அக்காலத்திற்குப் பொருத்தமாக இருந்திருக்கலாம். குர்ஆன் 1952 க்குப் பொருந்தாது. தர்க்கிப்பதாக இருந்தால் கூட்டம் போட்டு விவாதம் செய்வோம்."[3]

என்று பேசி சவால் விட்டு, குர்

குறிப்பு:- 1. இவ்வினாவுக்கு, அப்பொழுதே 'தாருல்-இஸ்லாம்' மூலியமாக விடை யளிக்கப்பட்டிருக்கின்றது. சென்ற வருஷ ஆரம்பத்தில் 'குறளும்—குர்ஆனும்' என்ற இ. இ. வெ. 39ல் விடையளிக்கப்பட்டு பெரியார் முதலிய சு.ம. இயக்க மூக்கியஸ்தர்களுக்கும், பத்திரிகைகளுக்கும அனுப்பப்பட்டுள்ளது. '—இஸ்லாம்', 'முஸ்லிம்—' பெயர் தாங்கிய எல்லா பத்திரிகைகளும் கட்டுப்பாடாக இவ்வெளியீட்டையும் இருட்டடைப்பு செய்து விட்டன. என்னே இவர்களின் இஸ்லாமியப்பற்றும், சின்ன புத்தியும்! குர்ஆன் (49:6 ல் கண்ட) புத்திமதியை இவர்கள் அவமதிப்பதினாலே தான் இஸ்லாம் இவ்வாறெல்லாம் இகழப்படுகின்றது

2. இதுபற்றிப் பின்னர் தனியாக கவனிக்கப்படும். இக்குற்றச்சாட்டுக்குக் கொஞ்சமும் ஆதாரமில்லை யென்பதை குர்ஆன்—ஹதீஸ் ஆதாரங்களுடன், இ. இ. வெ. 2 "பாரத குமாரி விபசாரியா-பிசாசா?" 3. "இஸ்லாத்தை ஒழிக்க முடிவு or S. குஞ்சிதம் B.A., L.T., யின் அறியாமை" 22. "முஸ்லிம் பெண்கள் விபசார தோஷமுள்ள அடிமைகள் தானா?" 43. "காதல் மணம்"– இதை குர்ஆன் தடுக்கின்றதா?", 46. "கோஷா-பர்தா-முகமூடி. இதற்கு குர்ஆன் ஆதாரமுண்டா?" 47. "கோஷா-பர்தா என்றால் பயங்கர அடிமைத்தனம் கூடிய ஜெயில் வாசம் தானா?" என்ற நூல்களில் நிரூபிக்கப் பட்டிருந்தாலும், இந்நூல்கள் குற்றஞ் சாட்டும் பெரியாருக்கு அனுப்பப்பட்டிருந்தாலும், மேலும் மேலும் சொன்னதையே சொல்லிக் கொண்டுள்ளனர், என்ன செய்வது! என்றாலும், இ. இ. ம். மூலியமாக மறுபடியும் இவ்விஷயம் கவனிக்கப்படும்.

3 நெருக்கிப் பிடிக்கவும், இவர்,

னை விட குறள் எக்காலத்துக்கும் பொருத்தமான நூல்[4] என்று பேசியுள்ளாராம்.

இவர்கள் மட்டுமல்ல, குர்ஆனைக் கற்றுணராமலே உலகாயதப் படிப்பில் மட்டும் தேர்ச்சி பெற்ற முஸ்லிம் பட்டதாரிகளில் சிலரும் இவ்வாறு கேட்கின்றனர். இதை ஒட்டி ஆராய்ச்சி அறிவும், பகுத்தறிவு பக்குவமும் பெறாதவர்கள் இவ்வாறு கேட்டுக்கொண்டே இருப்பதில் ஆச்சர்யமில்லை.

இந்த சந்தேக வினாவுக்கு முஸ்லிம்கள் சமாதானங் கூறக் கடமைப்பட்டுள்ளனர். யாருக்கும் எழக்கூடிய சந்தேக வினாவே இது. நேற்று தயாரான நம் தேச அரசியல் சட்டங்களில் சில இன்று பயன்படவில்லையென்றும், சிலவற்றை மாற்றியமைக்க வேண்டும், திருத்த வேண்டும் என்றும், சிலவற்றை நீக்கிவிட வேண்டும் என்றும், அதில் புதிதாக பல சட்டங்களைப் புகுத்த வேண்டும் என்றும், இச்சட்டடத்தை எழுதி அங்கீகரித்தவர்களே கூறுகின்றனர். சில திருத்தங்களை இரண்டோர் ஆண்டுகளுக்குள்ளேயே செய்துமவிட்டனர். இத்தனைக்கும் இச்சட்டங்களை இயற்றியவர்கள் சாமன்யப் பேர்வழிகளல்ல. பெரும் பெரும் சட்ட நிபுணர்களும், உலக சட்டங்களைக் கரைத்துக் குடித்தப் பேரறிஞர்களும் ஆவார்கள். ஒரு நாள் இரண்டு நாட்களில் நம் நாட்டு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டதல்ல. 2 வருஷங்களுக்கு மேல், ஒருவர் இருவர் அல்ல, பலநூறு நிபுணர்கள் உட்கார்ந்து ஆலோசித்து, ஆராய்ச்சி செய்து, விவாதித்து, காரசாரமாகத் தர்க்கித்து உருவாக்கினார்கள். பின்னர் சட்ட சபையில் அரங்கேற்றினார்கள் பல மாத விவாதங்களுக்குப் பின். இதற்கான செலவோ சிலகோடி ரூபாய்கள். இதுபோன்ற சட்டமே எல்லாக் குறைகளும் நிறைந்தது என்று இன்று கூறப்படுகின்றது. பிரஸ்தாபத்திலுள்ள பெரியார் ஈ. வெ. ரா. வென்பவர் இச்சட்டம் ஆறு — எழு கோடி மக்களுக்குப் பொருந்தாது, தீங்கு விளைவிப்பது, அதை சுட்டுப் பொசுக்கி அழித்து ஒழித்துவிடவேண்டும் என்று கிளர்ச்சி வேறு செய்து வருகின்றார்; இதற்காக சத்தியாக்கிரகமும் செய்யப்போகின்றார்.

இந்நிலையில், 20 ம் நூற்றாண்டில், அறிவு இந்த வகையில்

தான் அப்படிப் பேசவே இல்லையென்ற கருத்துப்பட 'திராவிட நாடு' பத்திரிகையில் எழுதி, இஸ்லாத்தைப் புகழ்ந்து நீண்ட அறிக்கை விட்டிருக்கின்றார்]

4. இதன் உண்மையை இ. இ. வெ. 39 'குர்ஆனும் குறளும்' அலசியிருக்கின்றது. இதில் குர்ஆன் எக்காலத்துக்கும் பொருந்திய சட்ட திட்டங்களடங்கிய நூல் மட்டுமல்ல, குரான் புதுப்பிக்கப்பட்ட குறள் பதிப்பு (Latest revised Kural Edition) என்று கூட நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

வளர்ந்து கொண்டிருக்கையில், 1300 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட குர்ஆன் என்னும் சட்டம் எக்காலத்துக்கும் பொருந்தும் என்பது வெகு துணிச்சலான கூற்றே ஆகும்.

மேலும், மேற்படி குர்ஆன் சட்டத்தைத் தொகுத்தவர் ஒரு தனி மனிதர்!.

மேலும், இந்த மனிதர் கல்வி அறிவு படைத்தவரா வென்றால் சுத்த சூன்யம். இவரை 'உம்மி' =கைநாட்டுப் பேர்வழி!. என்று கூட அழைப்பர். கையெழுத்து கூட போடத் தெரிந்து கொள்ளாதவர்!!

போகட்டும், சட்ட நிபுணர்களின் உதவி கொண்டாவது இதை இயற்றினாரா வென்றால், முற்றிலும் எந்த மனிதனுடைய உதவியும் கிடையாது!!!

போகட்டும், குர்ஆன் அக்காலத்து அறிஞர்களால் அலசப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதா வென்றால், அப்படியுமில்லை! அக்காலத்தில் ஆராய்ச்சி அறிவு ஏது? அதுவும் அந்தகாரம் நிறைந்திருந்த அரப் பாலைவனத்தில்!. அந்த அரபிகளின் கல்வி அறிவெல்லாம், காமத்துக்கும், கள்ளுக்கும், பெண்ணுக்கும், குதிரைக்கும், கத்திக்கும், யுத்தத்துக்குமாக வாட்டுக் கவிப்பாடத் தெரிந்திருந்தது மட்டும் தான்.

இவர்களிடையில் தோன்றியவரும், பள்ளிக்கூட வாசனையே முற்றிலும் இல்லாமல் இளமையில் ஆடு—ஒட்டகம் மேய்த்துக்கொண்டிருந்தவரும் ஆன ஒருவரால் தொகுக்கப்பட்டது எனப்படும் குர்ஆன் சட்டம் எக்காலத்துக்கும் உலகனைத்துக்கும் போதுமான தென்றால் யார் தான் சுலபமாய் ஏற்றுக் கொள்ளுவர்?

ஹிந்து — கிறிஸ்து — வேதங்களும்

எக்காலத்துக்கும் பொருந்தும்

—○—

என்று தான் இந்துக்களும் கிறிஸ்துவர்களும் நம்புகின்றனர், வாதாடுகின்றனர்.

ஹிந்துக்கள் தங்கள் வேதங்களும் மதமும் தான் ஆதிகாலத்தது என்று வாதிக்கின்றனர். உண்மை என்னவோ, ஹிந்து வேதங்கள் சரித்திர காலத்துக்கு முன்பு தோன்றியவை தான். எப்பொழுது தோன்றியதோ, யாரும் திட்டமாக சொல்லுவதற்கில்லை. பல்லாயிர வருஷங்களுக்கு முன் தோன்றிய ஹிந்து வேதங்கள் எப்படி இத்தனை வருஷங்களாக, ஆயிர வருஷங்களுக்கு மேலாக முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் இந்துக்களை ஆண்டிருந்தும், இன்னமும் அழியாமலும் அழிக்கப்படாமலும் இருக்கின்றனவோ, அப்படியே அவை எக்காலத்துக்கும் இருக்கும், எக்காலத்துக்கும் போதுமானதாக இருக்கும் என்று வாதிக்கின்றனர். அது மட்டுமோ, ஹிந்து மதத்தை உலக மதமாக்கவேண்டுமென்று

பஹீரத முயற்சிகள் செய்யப் பட்டு வரவில்லையா? விவேகாநந்தர் இந்து தர்மத்தை அமெரிக்காவில் கூட பிரச்சாரம் செய்து அங்கு வித்திட்டு வரவில்லையா? ஸர். C. P. ராமஸ்வாமி ஐயர் அடிக்கடி உலகத்தைச் சுற்றி ஹிந்து தர்மத்தைப் பிரச்சாரம் செய்து கொண்டில்லையா? காந்தியார் இந்து தானே! அவர் உலகமனைத்திலும் ஹிந்து தர்மம் பரவ வேண்டும் என்று விரும்பவில்லையா? அதை ஒட்டி ஒரு இயக்கம் நடந்து வரவில்லையா? இதிலிருந்து ஹிந்துக்கள் தங்கள் வேதங்கள் எக்காலத்துக்கும், உலகனைத்துக்கும் பொருந்தும் என்று காணயமாகவே நினைக்கின்றனர், பெரியார் ஈ. வெ. ராவும், நெடுஞ்செழியனும் ஒரு இயக்கமாக இந்து—வேதம்—கடவுள்கள்—தர்மம்—கோவில், இந்து வெனப்படும் அனைத்தையும் அதன் அறிகுறி எதுவும் இல்லாதபடி ஒழித்துக் கட்டிணாலொழிய மனித வர்க்கம் மானத்தோடு வாழவோ, முன்னேறவோ முடியாது என்றுப் பிரச்சாரம் செய்து வந்தும்!!

கிருஸ்துவர்கள்

ஹிந்துக்கள் மேற்கண்டவாறு தங்கள் வேதங்கள் என்றென்றைக்கும் பொருந்து மென்று வாதிக்க, கிறிஸ்துவர்களும் ஹிந்துக்களைப் போலவே, முஸ்லிம்களைப் போலவே, தங்கள் வேதம் எனப்படும் 'பைபிள்' தேவ வாக்கென்றும், அது உலகனைத்துக்கும், எக்காலத்துக்கும் பொருந்தும் என்றும் நம்புவதை காரியாம்சத்தில் நிறைவேற்ற கோடி கோடிக் கணக்கில் செலவு செய்து கொண்டு மூலை முடுக்குகளிலெல்லாம் தங்கள் வேத—மதத்தைப் பரத்திக் கொண்டுதானே இருக்கின்றனர். ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் கம்யூனிஸ்ட்களால் கிறிஸ்து மதம் அழிக்கப்பட்டு வந்தாலும், விஞ்ஞானிகளால் கைவிடப்பட்டு வந்தாலும், கிறிஸ்துவர்கள் தங்கள் வேதம் உலகனைத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் என்ற நம்பிக்கையில் கிஞ்சிற்றும் தளர்ச்சி கொள்ளாமல்தானே உலகனைத்தினரை கிறிஸ்துவர்களாக்க முயன்று வருகின்றனர். அவர்களின் முயற்சியுடன் ஒப்பிடுகையில் ஹிந்து—முஸ்லிம்களின் முயற்சியும் நம்பிக்கையும் வெறும் வாய்ச் சவடால் என்றே கொள்ள வேண்டும். அவர்களின் பிரச்சார முறையைத் தான் ஹிந்து—முஸ்லிம்கள் காப்பி அடிக்க முயலுகின்றனர், அறை குறையான நம்பிக்கையுடன்.

புத்தர்கள்

இப்படியே புத்தர்களும், பார்சிகளும், ஏனைய மதத்தினரும் தங்கள் தங்கள் மதக்கோட்பாடுகளே சரியானது, எக்காலத்துக்கும், உலகனைவருக்கும் பொருத்தமானது என்று நினைப்பதினாலேத் தான் அவர்களும் தங்கள் மதப்பிரச்சாரங்களை செய்து கொண்டுதான் இருக்கின்றனர்.

யூதர்களைப் பாருங்களேன்! இன்னமும் தங்களுக்கு ஒரு தீர்க்கதரிசி வரப்போகின்றார், அவர் மூலியமாக யூத மதம் உலகமெல்லாம் பரவப் போகின்றது என்று நம்பிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

குறள் மதத்தினர், அதாவது ஈ. வெ. ரா., நெடுஞ்செழியன் ஆகிய நம் நாட்டு நாஸ்திகர்கள் குறள் உலகனைத்துக்கும் எக்காலத்துக்கும் போதுமானதாக அமைந்திருக்கின்றது என்று சமீப காலமாக தீவிரப்பிரச்சாரம் செய்துவருகின்றனர். குறளுடன் ஒப்பிட்டால் குர்ஆன், பைபிள், நம் தேச வேதங்கள் அனைத்தும் குப்பைத் தொட்டியில் போடவேண்டியவைகள் என்றல்லவோ கூறுகின்றனர்.

இவ்வாறு பரிசீலித்துக் கொண்டே போனால், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேதங்களே எக்காலத்துக்கும் பொருந்தும் என்று நம்பும் பொழுது, குர்ஆன் ஒன்றுதான் 1952க்கு மட்டுமல்ல, உலகனைத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் என்பது உண்மையில் வெகு துணிச்சலான கூற்றேயாகும். இந்த claim வாதத்தை ஏற்றுக்கொள்ள நெடுஞ்செழியனோ, ஈ.வெ.ரா.வோ, வேறு எவரோ மறுத்தால், அதற்காக முஸ்லிம்கள் ஆத்திரப்படுவது என்பது சரியல்லவென்றும் கூறலாம். ஏனென்றால், இவர்கள் முஸ்லிம்களல்ல, மேலும், இவர்கள் குர்ஆனைப் படித்துணரும்படி முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள் பைபிளை அவரவர்கள் பாஷையிலேயே தயாரித்து விநோகிப்பது போல், குர்ஆனைக் கொடுக்கவில்லை. முஸ்லிம்கள் தமிழ் நாட்டில் தோன்றி 1000 வருஷம் போல் ஆகியும், இப்பொழுது தான் அரபியிலுள்ள குர்ஆனுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்று கொடுத்துள்ளனர். இதுவும் பழங்காலத்துக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட மொழி பெயர்ப்பு. இதன்படி முஸ்லிம்கள் 4 மனைவிகளை மட்டுமல்ல, 60—600, தசரதரைப் போல் 6000, வைப்பாட்டிகளையும்— கணக்கு வழக்கின்றி-- வைத்துக்கொள்ளலாம். இம் மொழி பெயர்ப்பின் விலை 30 ரூபாய் போல் ஆகிவிடுகின்றது. இம்மொழி பெயர்ப்பைக் கொண்டு குர்ஆன் எக்காலத்துக்கும் பொருந்தாது என்று நானே நிரூபித்து விடுவேன், யாராவது சவால் விடுவதானால். இந்நிலையில், இஸ்லாத்தை உணராத, உணர்த்தப்படாத நாஸ்திகர்களும், ஏனையோரும் இஸ்லாமையும், குர்ஆனையும், குறை கூறினால், குற்றம் நம்முடையது, முஸ்லிம்களுடையது, முஸ்லிம் சாஸ்திரிகளாகிய மௌலவிகளுடையதே ஆகும்.

குர்ஆன் தோன்றிய விதம்.

முதல் கட்டுரையில், உலகத்தில் எந்த சட்ட திட்டமும்,

உலக சட்ட நிபுணர்களில் பலர் சேர்ந்து, பல வருஷங்கள் சிந்தித்து உருவாக்கிய நம் நாட்டு அரசியல் சட்டமும் கூட, எக்காலத்துக்கும் பொருந்தாததாக, திருத்தப்பட வேண்டியதாக இருக்க, 1500 வருஷங்களுக்கு முன், அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடந்த அரபிகளினிடையில் தோன்றி கையெழுத்து போடக் கூடக் கற்றுக்கொள்ளாத ஒரு கைநாட்டுக் காட்டரபியினால் கொடுக்கப்பட்ட, குர்ஆன் சட்டம் உலகனைத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் என்று கூறுவது, ஏற்றுக்கொள்ளக் கூடாததாகவே தோன்றுகின்றது என்று கண்டோம். இரண்டாவது கட்டுரையில் உலக மதத்தினரனைவரும் தங்கள் தங்கள் வேதங்கள் தான் உலகனைத்துக்கும் போதுமானதாக அமைந்திருப்பதாக வாதாடுகின்றனர் என்பதையும் கண்டோம். இக்கட்டுரையில், ப்ரச்சினையிலுள்ள

குர்ஆன் என்பது என்ன?

என்பதை முதலில் விளங்கிக் கொண்டு மேலே செல்லுவோம்.

குர்ஆன் என்பது அரபி பதம். இந்தப் பதத்தைக் கொண்டு தான் குர்ஆன் புத்தகம் தன்னை அடிக்கடி குறித்துக்கொண்டாலும், வேறு பதங்களாலும் குர்ஆன் தன்னை குறித்துக்கொள்ளுகின்றது: குர்ஆனுக்கு 'அலகித்தாப்' என்ற பெயரும் உண்டு. ('The Prophet =) 'நபி' என்றால் இறுதி நபி முஹம்மது நபியவர்களையே எப்படி குறித்துக் கொண்டிருக்கின்றதோ, அப்படியே 'அல்கித்தாப்' என்றால் குர்ஆனையே குறிக்கும். அல்கித்தாப் என்றால் (The Book) 'புத்தகம்' என்பது பொருள். இவ்வாறு குர்ஆனில் குர்ஆனுக்கு சுமார் 30-க்கு மேற்பட்ட பெயர்கள் உள்ளன.

இனி, இவ்வேத புத்தகத்தை குர்ஆன் என்றும், இதைத் தந்து சென்ற முஹம்மது நபியவர்களை 'இறுதி நபி' என்றும், குர்ஆன் கூற்றுப்படி முஸ்லிம்களின் கடவுளை 'அல்லாஹ்' என்றும் குறிப்பிடுவோமாக.

குர்ஆன் (30 நாள் உபவாசமிருக்கும்) ரம்ஜான் மாத இறுதி வாரத்தில் மேலே விவரிக்கப்பட்ட கைகாட்டுக் காட்டரபியாகிய இறுதி (முஹம்மது) நபியவர்களுக்கு, கி. பி. 610 அல்லது 611 வது வருஷத்தில் அருளப்பட்டது. யாரால், இறைவனால்; யார் மூலியமாக, மாயாவிகளாக வேலை செய்யும் தேவதூதர்களில் ஒருவராகிய ஜிப்ரயீல் என்று முஸ்லிம்களால் அழைக்கப்படும் கேப்ரியல் தூதுவர் மூலியமாக.

இங்கே 'இறைவன்', 'தேவ தூதன்', 'தேவ வாக்கு', என்றால் என்னவென்று விளக்குவதற்கல்ல இது எழுதப்படுகின்றது என்பதை வாசக நேயர்கள் மறந்துவிடக் கூடாது. ப்ரச்னையெல்லாம் குர்ஆன் சட்ட திட்டங்கள் 1952-க்கும் எக்கா

லத்துக்கும் பொருந்துமா? வென்பதே. பொருந்துமென்றால், பொருந்துமென்று ஏற்பட்டுவிட்டால், தேவவாக்கே என்று ஏற்றுக்கொள்ள எந்த நாஸ்திகனுக்கும் சிரமம் இருக்காது, இருக்கக்கூடாது, அவன் விதண்டாவாதியாகிய வீணனாக இருந்தாலொழிய:

குர்ஆன், மேலே கண்டபடி இறுதி நபியவர்களுக்கு அவருடைய 40-வது வயதில் ஜிப்ரயீல் என்ற தேவ தூதர் மூலியமாக, பெரும்பாலார் கணக்குப்படி, கி. பி. 611 ஜனவரி 17 ல் வெளியாக ஆரம்பித்து, (நபியவர்களுடைய அந்திய காலம் வரையில்) சுமார் 23 வருஷங்கள் வரையிலும், அவருக்கு வெளியாகி, கி. பி. 633 வாக்கில் பூர்த்தி யடைந்திருக்கின்றது. குர்ஆனில் 3,34,885 எழுத்துக்கள் கொண்ட 76,785 சொற்களுடன் கூடிய 6350 வாக்கியங்களுள்ளன.

குர்ஆன் அருளப்படும் பொழுது இறுதி நபியவர்கள் பெரும்பாலும் ப்ரக்ஞையற்று கடுங்குளிர் காலத்திலும் வியர்த்து விடுவார்கள். அந்த நிலையில் அவர் உச்சரிப்பதை அவருடைய தோழர்கள் உடனுக்குடன், அக்காலத்தில் காகித மில்லாததால், முன்னேற்பாட்டுடன் தயாராக இருந்து, தோல், பேரீத்த மரப்பட்டை, ஓடு, எலும்பு இவைகளில் எழுதிக்கொள்ளுவார்கள். அரபிகள் மனனம் செய்வதில் ப்ரக்யாதி பெற்றவர்களாகையால், வெகு பலர் நபியவர்கள் வாயிலிருந்து வருவதையெல்லாம் உடனுடக்குடன் வாய்ப்பாடமாக்கிக் கொண்டுவிடுவார்கள்.

பின்னர், எழுதியவற்றையும் வாய்ப்பாட மாக்கப்பட்டவைகளையும் சரி பார்த்து எழுதுவித்து, அவைகளை, நபியவர்களின் ஆயுட்காலதிலேயே, அவர் மூலியமாக வெளியான ஆறாயிரத்து சொச்ச வசனங்களையும் அத்தியாயங்களாகத் தொகுத்து, விஷயத்துக்கேற்றுப் போல் வசனங்களை அந்ததந்த அத்தியாயங்களின் கீழ் அமைத்து, எல்லாம் ஓர் கிரந்தமாகும் முறையில் ஏற்பாடு செய்து விட்டார்கள்.

முன் கால தேவ — வெளிப்பாடுகளெல்லாம் அடைந்த கெதியை குர்ஆனும் அடையாதபடி குர்ஆன் முழுவதையும் சிறுவர் முதல் ஆண்-பெண் இருபாலாரில் பெரும்பாலார் வாய்ப்பாடமாக ஒப்புவிக்கும்படி வேறு ஏற்பாடு செய்து விட்டாகள். இந்தப் பழக்கத்தை ஒட்டியே இன்றைக்கும் உலகத்தில் எந்த மூலை முடுக்குகளில் முஸ்லிம்கள் இருந்தாலும் அங்கு 'ஹாபிஸ்' என்ற பட்டம் பெற்றவர்கள் குர்ஆனை வாய்ப்பாடமாக ஒப்புவித்துக் கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட வாய்ப்பாடகர்கள் குர்ஆனை ஒப்புவிக்கும் முறையிலோ, அதன் உச்சரிப்பிலோ பிசகேற்படாதபடி இறுதி நபியவர்கள் தன் காலத்திலேயே

கவலையுடன் ஏற்பாடு செய்து வந்திருக்கின்றார்கள். இதில் திறம் பெற்றவர்களில் நபியவர்களின் இளம் மனைவி ஆயிஷா பிராட்டியாரும் ஒருவர் என்று சரித்திரம் கூறுகின்றது. இவ்வாறு குர்ஆனில் ஒரு சிறு பிழையும் ஏற்படாதபடி கண்ணும் கருத்துமாயிருந்திருக்கின்றார்கள் நபியவர்களும், அவர்கள் தோழர்களும், இன்று வரை முஸ்லிம்களனைவரும்.

இப்படி எழுத்து மூலியமாகவும், மனதிலும் பதிய வைத்திருந்த குர்ஆனை இறுதிநபியவர்களுக்குப் பின் இஸ்லாமியக் குடி அரசின் கலிபா எனப்பட்ட முதல் ஜனாதிபதியாகிய ஹஜ்ரத் அபூபக்கர் அவர்கள் குர்ஆனை ஒரு புத்தக ரூபமாக்கிக் கொண்டார்கள். இப்புத்தகம் (Official Copy), அவருக்குப்பின் ஜனாதிபதியான ஹஜ்ரத் உமர் அவர்கள் கைக்குச் சென்று, அவருக்குப் பின் கலிபாவான ஹஜ்ரத் உத்மான் அவர்கள் காலத்தில் அந்த ஆதி குர்ஆன் புத்தகத்திலிருந்து, அவருடைய நேர் பார்வையில் பல கையெழுத்துப் பிரதிகள் காப்பி செய்யப்பட்டன. இந்த காலத்தில், இந்த சர்க்கார் காப்பியைத் தவிர்த்த இதரரிடமிருந்த வேறு காப்பிகளையெல்லாம் சேகரித்து அழித்து விட்டார்கள், முரண்பாட்டுக்கு இடம் கிடைக்காமலிருக்க.

இவ்வாறு குர்ஆன் ஆரம்பத்திலிருந்தே, அதில் மனித சேஷ்டைக்கு இடம் கிடைக்காதபடி பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது. அன்று, 1320 வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட குர்ஆனில் உள்ளது போலவே இம்மியளவு கூட்டல் குறைத்தல் மாறுதல் இன்றி இன்றைக்கும் நம் கையில் இருந்து வருகின்றது. இது சரித்திரமும் எதிரிகளும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும்.

இதைப்பற்றியதல்ல பிரச்னை. இதுபற்றிய பிணக்கோ சந்தேகமோ யாருக்கும் எதிரிக்கும் கூட இல்லை.

கேள்வியெல்லாம், இந்த குர்ஆன் சட்ட திட்டங்கள் எக்காலத்துக்கும் பொருந்துமா? என்பதே!

......

ஹிந்து—கிறிஸ்துவ வேதங்கள் எக்காலத்துக்கும் பொருந்தாதா?

—✱—

முன், முதல் கட்டுரையில், 1400-க்கு முன் தோன்றிய குர்ஆன் சட்ட திட்டங்கள் எக்காலத்துக்கும் உலகனைத்துக்கும் பொருந்தும் என்ற முஸ்லிம்களின் வாதத்தை நம்புவது சிரமம் தான் என்றும், இரண்டாவது கட்டுரையில், எல்லா மத வேதங்களும் தான் எக்காலத்துக்கும் பொருந்தும் என்று அவ்வவ் வேதக்காரர்கள் தாவா செய்கின்றவர் என்றும், மூன்றாவது கட்டுரையில் குர்ஆன் என்பது யாரால், எப்பொழுது, எப்படி உருவா

யீற்று என்றும், அதில், அது கிடைத்த இந்த 1400 வருஷங்களாக எவ்வித ஒரு சிறு இம்மியளவு மாறுதலும் ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டு வருகிறதாகவும் கண்டோம்,

இப்பொழுது, குர் ஆன் மட்டும் தான் எல்லா காலத்துக்கும் பொருந்தும், என்பதை பரிசீலிக்கும் முன் ஏனைய மத வேதங்கள், அவ்வவ் வேதக்காரர்கள் கூற்றுப்படி எககாலத்துக்கும் பொருந்தாதவை என்பதையும் பார்த்து விடுவோம்.

முஸ்லிம்கள், குர்ஆன் ஒன்றுதான் (Universal) எக்காலத்துக்கும்எல்லோருக்கும் போதுமானதாக அமைந்துள்ளதாகவும், ஏனையமத வேதங்களெல்லாம் அதன்பரிசுத்தத் தன்மையை இழந்துவிட்டிருப்பதுடன், அவை எக்காலத்துக்குமாக ஏற்படாமல், ஒவ்வோர் (National & Communal) சமூகத்துக்கும் தேசத்துக்குமாக ஏற்பட்டவைகள் என்றும் வாதிக்கின்றனர். இதன் உண்மையையும் பார்த்து விடுவோம்.

ஹிந்து மத வேதம்.

இந்து மதம் என்பது நம் இந்திய எல்லைக்குள் அடங்கியதாகவே இருக்கின்றது, சரித்திரக் கூற்றுப்படியும், உண்மையிலும். இதற்கு, இந்து மதத்துக்கு அடிப்படை எது என்று யாராலும் திட்டவட்டமாய் சொல்ல முடியவில்லை. நாலு வேதமென்கின்றோம். சில இந்துக்கள் 5 வேதங்கள் என்று வாதிக்கின்றனர். வேதங்கள் மட்டுமல்ல, ஸ்மிருதிகள், உபநிஷத்க்கள், சாஸ்திரங்கள், பலவித தர்ம நூல்கள், புராணங்கள், பகவத் கீதை முதலிய இன்னும் பல பல இந்து மத வேத சாஸ்திரங்களாகக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதான்—இவைதான் ஹிந்து மதத்தைக் கட்டுப்படுத்தும் வேதம் என்று ஏகோபித்த அபிப்பிராயம் கிடையாது. இந்துக்களுக்கேத் தங்கள் வேதம் என்னவென்று தெரியாது என்றால் மிகைப்படுத்திக் கூறியதாகாது. பிராமணர்கள் தான் 4 வேதம் என்பர். ஏனையோரில் 10,000 ல் ஒருவருக்கும் தங்கள் வேதம் என்னவென்று சொல்லத்தெரியாது. போகட்டும், பிராமணர்களிலும் ஒரு சிலருக்குத் தான் இதுபற்றிய ஞானம் இருக்கப்பார்க்கலாம். போகட்டும், இந்த 4 வேதங்களைப்பற்றி அலசிப்பார்த்தால், ஒன்றுக்கொன்று முரண்பட்டதாய்இருக்கின்றன வென்று இந்து மத ஸாஸ்திரிகளே கூறுகின்றனர்.

இவ்வேதங்கள் பண்டை கால நம் நாட்டு ரிஷிகளுக்கு இறைவனால் கூறப்பட்டதாக கூறப்படுகின்றது. வேதங்கள் தோன்றிய வகையைப் பற்றியும் ஒன்றும் திட்டவட்டமாக யாரும் கூறுவதற்சில்லை. யார், யாருக்கு, எப்படி, யாரால் எப்பொழுது வெளியாக்கப்பட்டது என்று கூட நம்பத்தக்க ஆதாரங்கள் இல்லை. போகட்டும், இந்துக்களனைவரையும் இவ் வேதங்கள் கட்டுப்படுத்துகின்றனவா வென்றாலும் அப்படியும் சொல்லுவதற்கில்லை. திராவிட இந்துக்கள் தங்களுக்கு வேறு வேத சாஸ்திரங்கள் என்று வாதிக்கின்றனர். குறள் தான் திராவிட மக்களின் திருமறை—வேதம் என்று நிரூபிக்கின்றனர். இப்படி எண்ணிறந்த அபிப்பிராய பேதங்கள் இந்து வேதங்களைப் பற்றி ஹிந்

துக்களிடமே காணலாம். மெளடீக காலத்தில் பிராமணர்கள் என்று இன்று கூறப்படும் ஆரிய இனத்தினரின் கற்பனைகள்தான் ஹிந்து வேத சாஸ்திரங்கள் என்பவையெல்லாம் என்று தக்க ஆதாரங்களுடன் ஹிந்துக்களில் ஒரு சாரார் வாதித்து வருகின்றனர்.

இவையெல்லாம் அல்ல விஷயம். விஷயமெல்லாம் ஹிந்து வேதங்களின் விதிகள் உலகனைத்துக்கும், எக்காலத்துக்கும் போதுமானதாக அமைந்துள்ளனவா என்பதே! ஹிந்து சாஸ்திரிகளும், தேசிய—அரசியல் தலைவர்களும் தங்கள் வேத சாஸ்திரங்களை ஒதுக்கி வைத்து விட்டு, அறிவுக்கும்-ஆராய்ச்சிக்கும்-இக்காலத்துக்கும் பொருத்தமான சட்ட திட்டங்களை சட்ட சபைகளின் மூலியமாக இந்துக்களிடையில் திணித்து வருவதிலிருந்து இந்து வேதங்கள் எக்காலத்துக்கும் பொருந்தாது என்பது சொல்லாமலே விளங்குகின்றது. குர்ஆன் சட்டதிட்டங்களே இந்துக்ளிடம் புகுத்தப்படுகின்றதென்பது போகப்போக விளங்கும். பெண்களுக்கு சொத்துரிமை, விவாகரத்துரிமை, ஏகதாரமணம், பால்ய விவாகத் தடுப்பு, விதவா விவாஹம், சமத்துவம், சமசந்தர்ப்பம், இவ்வாறு எண்ணிறந்த சீர்திருத்தங்கள் சட்ட மூலியமாகத்தான் செய்யப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் குர்ஆன் சட்ட திட்டங்களே. சுருங்கச் சொல்லின், ஹிந்துமத வேத சாஸ்திரங்கள் காலாவதி ஆனவைகள் என்று இந்து சட்ட நிபுணர்களின் கூற்றுகளே நிரூபிக்கின்றன. அடுத்தபடியாக,

கிறிஸ்து மத வேதம் எக்காலத்துக்கும் பொருந்தாதா?

என்பதைப் பார்ப்போம். 'இல்லை' என்று சொல்லவோ, சவால் விட்டால் நிரூபிக்கவோ எவ்வித சிரமமும் இருக்காது. கிறிஸ்து என்று ஒருவர் இருந்தாரா வென்பதே சந்தேகத்தில் வந்துவிட்டது. வேதம் என்னும் Bible 'பைபிள்' கிறிஸ்துவாலோ, அவர் காலத்திலோ தோன்றியதல்ல என்பதை எந்த கிருஸ்துவரும் மறுக்கமாட்டார்.

மேலும், பைபிள் என்பது கதைகள் நிறைந்த புத்தகமே ஒழிய தர்ம நூலல்ல. அதில் இயேசு நாதர் பிறந்து வளர்ந்து கொல்லப்பட்ட கதைகளும், இயேசுவுக்கு முன் தோன்றிய எண்ணிறந்த தீர்க்கதரிசிகள் என்பவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் நிறைந்த புராண புத்தகமாகும். இயேசுவின் சரித்திரத்தைப் பலர் பல பலவிதமாகத் தாங்கள் கேட்டவைகளைத் தங்கள் கற்பனை சக்தியையும் சேர்த்து, இயேசு கொல்லப்பட்ட பல நூருண்டுகளுக்குப் பின் எழுதிய கதம்பக் கதைகள் நிறைந்த நூலே பைபிள் எனப்படுவது.

நமது பிரதமர் நேஹ்ருவின் சரித்திரக் குறிப்புகளிலேயே பொய்கள் கலந்துவிட்டன. அவரே இப்பொய்களை அம்பலப்படுத்தியுள்ளார். சமீபத்தில் அஹமதாபாத் சிறையில் 1ம் நம்பர் அறையில் நேஹ்ரு வசித்திருக்க, 8ம் நம்பர் அறையில் வசித்ததாக, நேஹ்ருவின் ஆட்சியிலேயே, அவர்களுடைய நண்பர்களே கல்வெட்டு மூலியமாக சரித்திரப் பதிவு செய்திருக்கின்றனர். இந்தக் கற்பனையை நேஹ்ரு நேருக்கு நேராக எடுத்துக்கா

ட்டியும் சரித்திராசிரியர்கள் ஒப்புக்கொள்ள மறுத்து, நேருவின் யோசனையின் பேரில் நேஷ்ருவுடன் கைதியாக இருந்து அவருக்கு வேலையாளாக விருந்த 'ரகு'வின் சாட்சியத்தின் பேரில் பொய்யைத் திருத்தியுள்ளனர் என்றால், 2000 வருஷங்களுக்கு முன் இறந்தவராகிய ஏசுபெருமான் சரித்திரத்தை அவர் இறந்த 300-400 வருஷங்களுக்குப் பின் எழுதுவதானால் --?? இந்த உண்மையை கிறிஸ்தவ ஆராய்ச்சியாளரே ஒப்புக்கொண்டு வருகின்றனர். இயேசு தன் 33 வது வயதிலேயே சிலுவையில் அறையப்பட்டு உயிர்நீத்து ஜெருஸலத்திலேயே புதைக்கப்பட்டார் என்று பைபிளில் காண்பீர்கள். இதை எழுதும் நான் ஜெ[illegible]த்தில் ஒரு வருஷ காலத்துக்கு மேல் வசித்துள்ளேன். அவர் பி[illegible]ந்ததாகவும், [illegible]ந்ததாகவும், [illegible]ந்ததாகவும், [illegible]ட்டதாகவும் [illegible]க்கப்பட்டதாகவும் கூறப்படும் இடங்களை யெல்லாம் அக்கறையுடன் திரிந்து பார்த்துள்ளேன். கிறிஸ்துவருக்குக் கிறிஸ்துவர் மாறுபட்ட கதைகளைக் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். நவீன ஆராய்ச்சியாளர் தக்க ஆதாரங்களுடன் இயேசு சிலுவையில் அறையப்பட்டு, ப்ரக்ஞையற்ற நிலையில் புதைக்கப்பட்டுப் பின் ப்ரக்ஞை பெற்று எழுந்து மாறு வேஷம் பூண்டு ஜெருஸலத்தை விட்டு மலைகளைக் கடந்து கீழ் திசையை நோக்கி [illegible] இந்தியாக காஷ்மீ[illegible] இருந்த இஸ்ரே[illegible]ரைக் கண்டு, அவர்[illegible]டன் நூறு வயதுக்கு மேல் வாழ்ந்து, தான் எதற்காக தோன்றினாரோ அந்த லட்சியம் பூர்த்தியான பிறகு இறந்து அங்கேயே சமாதி அடைந்திருக்கின்றார் என்று நிரூபிக்கின்றனர். இயேசு தீர்க்கதரிசி (ஈசா நபீ) கல்லறை என்று ஒன்று இன்றைக்கும் காஷ்மீரில் இருக்கின்றது. அது புண்ணிய ஸ்தலமாகக் கருதப்பட்டு வருகின்றது. இக்கூற்றை மறுத்துக் கூறிய ஆராய்ச்சியாளர் ஒருவரும் இல்லை.

ஜெருஸலத்திலேயே இரண்டு இடங்களில் அவருடைய கல்லறை என்று நிர்மாணிக்கப்பட்டு அவை வணங்கப்பட்டு வருகின்றன. ஒன்று ஜெருஸல கோட்டைக்குள். மற்றொன்று வெளியில், ஒரு தோட்டத்தில். பின்னது தான் பைபிள் வர்ணனைக்கு ஒத்து வருகின்றது.

மேலும் பைபிள் என்பது உருமாறிக்கொண்டே வருகின்றது. 1848 ல் அச்சடிக்கப்பட்ட-என்னிடமுள்ள-ஒரு பைபிளுடன் இன்று அச்சடிக்கப்பட்டுள்ள பைபிளை ஒப்பிட்டுப் பாருங்கள். வித்தியாசம் காண்பீர்கள். அவ்வப்பொழுது அதில் காணப்படும் குறைகளை நீக்கிக் கொண்டும், அறிவுக்கேற்றதைப் புகுத்திக்கொண்டும் கிறிஸ்துவ சாஸ்திரிக் குழுவினர் பகிரங்கமாகவே பைபிளை உருமாற்றிக் கொண்டு வருகின்றனர். இவ்வாறு பைபிள் தன் பரிசுத்தத் தன்மையை இழந்து விட்டிருக்கின்றது. இது இயேசுவால் கொடுக்கப்பட்ட தேவ வாக்கு கொண்ட நூலல்ல. வேத சாஸ்தரங்களைப் போலவே தான் பைபிள் என்பது யார் யாராலோ, எப்பொழுதோ கற்பனை செய்யப்பட்ட கிரந்தமாகும். இக்கூற்றை யாரும் மறுப்பதானால் ஆதாரங்கொடுக்கப்படும்.

கேள்வி இதுவல்ல; பைபிள் எக்காலத்துக்கும் எல்லோருக்கும் பொருந்துமா வென்பதே? பொருந்தாது, பொருந்தவில்லை யென்று கிறிஸ்துவர்களே கண்டு தேசத்துக்கோர் சட்டத்தை நிர்ணயித்துக் கொண்டு வருகின்றனர். கிறிஸ்துவ ரஷ்யா பைபிளையும் கிறிஸ்துவையும் நிராகரித்துவிட்டது. ஜெர்மன் மக்கள், பைபிளுக்கு பதிலாக ஹிட்லர் கண்ட 'மென் காம்ப்' என்ற அவருடைய கற்பனை நூலை

ஏற்றுக் கொண்டார்கள். கிறிஸ்துவப் பிரச்சாரமெல்லாம், 'கிறிஸ்துவை நம்பு—மோட்சம் கிடைக்கும்— இல்லையேல் நரகம் தான்' என்பது தான். ஆட்சிக்கும் வாழ்க்கைக்குமான சட்ட திட்டங்களுக்கும் பைபிளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. பைபிள் பிரதி ஞாயிறு தோறும் மாதா கோவிலில் வாசிக்கப் படுவதுடன் நின்று விடுகின்றது.

புத்த மத வேதம்

என்றொன்று இருப்பதாகத் தெரியவில்லை. அவர் கடவுளைப் பற்றி ஒன்றும் கூறாததினால்? தான் போலும், 5, 10, 100, 1000 அடி நீள புத்த சிலைகளைக் கடவுளாகக் கொண்டு புத்தர்கள் வணங்கி வருகின்றனர். அவர் உபதேசங்கள் இன்னவை என்று திட்ட வட்டமாய் சொல்வதற்கில்லை. அவரை பின் பற்றுவதாக சொல்லிக் கொள்ளப்படும் ஜப்பான், சீனா, சயாம், பர்மா, கொரியா, சிலோன் முதலிய நாடுகளில் புத்த வேதம் என்பது ஒன்று இருப்பதாகவோ, அதை பின் பற்ற வேண்டுமென்றோ பேச்சே கிடையாது. எல்லாம் இந்து மதமும், கிறிஸ்து மதமும் எப்படி கோவில்களிலும், சர்ச்சுகளிலும் அடங்கி விட்டிருக்கின்றனவோ அப்படியே புத்த மதம் புத்தர் கோவிலுடன் நின்று விடுகின்றது.

புத்தர்கள் தேசங்களாகிய சீனா. பர்மா, சையாம், ஸிலோன், இந்தோனேஷியா, மலேயா முதலிய இடங்களிலிருந்த புத்தர்களில் கால் பாகத்தினர், சுமார் 20 கோடியினர், குர்ஆனைக் கொண்ட முஸ்லிம்களாகி விட்டனர்

பார்ஸிகளுடைய மதம்

எனப்படும் ஜொராஷ்ட்ரிய மதம் எங்கும் அமலில் இருப்பதாக இல்லை. பார்ஸிகள் எல்லாம் முஸ்லிம்களாக மாறி விட்டனர். ஒரு சிலர் பம்பாயில் உள்ளனர். அவர்கள் நெருப்பை வணங்குவதுடன் நின்று விடுகின்றனர். மதப் பிரச்சாரம் செய்வதில்லை இவர்கள்.

யூதர்கள்,

இவர்களும் பார்ஸிகளைப் போலவே எல்லோரும் கிறிஸ்துவர்களாகிப் பின் முஸ்லிம்களாகி விட்டனர். ஒரு சிலர் சிதறிப் போயிருந்தவர்கள், பலஸ்தீனக் கடலோரத்தில் ஒரு சிறு ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொண்டு, இயேசு-மஸிதீர்க்கதரிசி வானத்திலிருந்து இறங்கி உலகத்தை வென்று மோசேயின மதத்தை உயிர்ப்பிக்கப் போகின்றார் என்று வானத்தைப் பார்த்தவண்ணமிருக்கின்றனர். இவர்கள் கிறிஸ்துவாலும், குர்ஆனாலும் சபிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களுடைய வேதம் என்பதும் பைபிளைப் போன்ற நிலையை அடைந்து அழிந்தே போய் விட்டதெனலாம்.

காந்தி மத வேதம்

என்பது அவர் வாழ் நாளிலேயே செல்வாக்கிழந்து விட்டது. சத்தியம்—அஹிம்சையை அடிப்ப

டையாகக் கொண்டதானலும், அவர் காலத்திலேயே அவை அவமதிக்கப்பட்டுவிட்டது. கவைக்குதவாத சுலோகங்கள் என்று காந்தியாரின் வாரிசுகளே-காந்தி சர்க்காரே, அதாவது, நேஹ்ரு சர்க்காரே அவைகளை அமலில் கொண்டுவரவில்லை இந்த உண்மையை நாம் அநுபவித்து வருகின்ரோம். ஆகையால் விளக்கம் தேவையில்லை.

எஞ்சிநிற்பது இஸ்லாமும் இறுதி நபியும், அதாவது குர்ஆன். இது எக்காலத்துக்கும், எல்லா தேசத்தினருக்கும் பொருந்துமாவென்பதே கேள்வி.

குறள் திருமறை.

புதிய குறள் மதத்தையும் கவனிப்போம். குறளின் கர்த்தா வள்ளுவரல்ல, வள்ளுவரின் குருவாகிய ஜைன மத குண்டகுண்ட தேவர் என்று **ஆராய்ச்சியாளர் நிரூபிக்கின்றனர்** குறள் பலரால் கற்பனை செய்யப்பட்ட ஒரு கதம்ப நூல் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

> **"இப்போது நாம் பார்க்கும் திருக்குறள் வள்ளுவர் செய்ததுதானா? என்ற ஐயம் தோன்றும்"**

> **"ஒப்பற்ற திருக்குறள் — உரை எழுதப் போனவர்கள் தங்கள் கருத்துக்கேற்ப உரை எழுதுவதற்கு மூலத்தையே ஆங்காங்கு இடங்களில் திருத்தியும் மாற்றியும் இருக்கின்றனர்"**

இக்கூற்றை குறள் மதத்தினர் மறுக்க முடியாது. மறுத்தால் மேலும் கவனிக்கலாம். இந்நிலையில் குறள் மதிப்பிழந்த ஒரு அனாதை நூலாகிவிட்டது,* ஒப்பற்ற நூலென்று விளம்பரப்படுத்தப் பட்டாலும்.

பெரியாரிஸம்

என்று ஒன்றை இப்பொழுது ஈ. வெ. ரா. பெரியாருடைய சிஷ்யர்கள் கற்பனை செய்து கொண்டு வருகின்றனர். நாஸ்திக வாதத்தை எடுத்து விட்டால் பெரியாரிஸம் இஸ்லாம் தான் என்பது விளங்கும். இஸ்லாத்தின் இலட்சியமே பெரியாரிஸம் எனலாம். இவருடைய மதமெல்லாம் (Bundle of contradictions) முரண்பாடமைந்த கதம்பம், இஸ்லாம், குறள் மதம், புத்தமதம், நாஸ்திகம், ஒரே குழப்பம்!

கேள்வி எல்லாம்,

குர் ஆன் 1952-க்குப் பொருந்துமா?

என்பதே; மற்ற மதவேதங்கள் பொருந்துமாவென்பதல்ல. மற்ற மத வேதங்கள் பொருந்தாது என்று மேலே நிரூபிக்கப்பட்டிருந்தாலும், அவ்வவ் மதத்தினர் தங்கள் தங்கள் வேதம் எக்காலத்துக்கும் பொருந்தும் என்று வாதித்தாலும், குர் ஆன் பொருந்துமா வென்பதே கேள்வியாகையால் இனி அதைப்பற்றி கவனிப்போம்.

---

* 1948ல் வெளியிடப்பட்ட இவுாத்தே இஸ்லாம் வெளியீடாகிய குறளும் குர்ஆனும், என்ற பிரசுரத்தைப் பார்க்கவும் விளக்கத்துக்கும், ஆதாரத்துக்கும்.

ருந்துமா?' அதாவது மேற்படி லட்சியத்தை அடைய ஆதரவு காட்டுகின்றதா வென்பதே! அல்லவா? விஷயத்தை குழப்பிக்கொள்ளாமல், ப்ரச்னையைத் திறந்த மனத்துடன் பரிசீலனை செய்யுங்கள்.

....

மனிதத் தேவை யென்ன?

எக்காலத்துக்கும் குர்ஆன் பொருந்துமா?

வென்றால் என்ன பொருள்? குர்ஆனில் அடங்கிய சட்ட திட்டங்கள், விதி விலக்குகள், மனித வர்க்கத்தின் சமூக வாழ்வுக்கு வழி செய்கின்றனவா? வென்பதேயாகும்.

மனிதனுக்கு வேண்டிய தென்ன?

குர்ஆன் 1952க்குப் பொருந்துமா? வென்று கேட்டவர்களாகிய சு. ம. க்காரர்களின், அல்லது திராவிட இயக்கத்தினரின், அதாவது நாஸ்திகத் தலைவர் ஈ.வெ. ராமஸ்வாமி நாயக்கரின் பாஷையில்,

"ஒரு நாட்டை அந்த நாட்டாரே ஆண்டாலும் சரி: அல்லது அந்நிய நாட்டான் ஆண்டாலும் சரி, அந்த ஆட்சியில் ஏழ்மை இல்லாதிருக்கிறதா? மத வெறி-ஜாதி வெறி இல்லாமலிருக்கிறதா? (இவைகளில்லாமலிருக்க) சகோதரத்துவம் சமத்துவம் நிலவுகிறதா? மக்கள் வாழ்க்கையைச் சுமையாகக் கருதாமல் சுகமாகக் கருதுகிறார்களா?''

என்பதே ஆகும். இதை முன்னரே கண்டோம். ஷெ பெரியாரே மேற்கொண்டும் சென்று,

"இவைகளை (மேலே கூறப்பட்டதை) உரைக்கல்லாக வைத்துத் தான் ஒரு ஆட்சி நல்லதா கெட்டதா வென்று முடிவு கட்டவேண்டும். என் சொந்த நாட்டினர் ஆட்சியில் பட்டினி கிடந்து செத்தாலும் எனக்குப் பெருமைதான் என்று கூறுவது, நான் திரித்த கயிற்றில் தூக்குப் போட்டுக்கொள்வது எனக்குப் பெருமை என்பது போன்றதாகும்.''

என்று உண்மையை இரத்னச் சுருக்கமாகவும் நாணயமாகவும் விளக்கியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகப் பேச்சாளிகளில் ஒருவராகிய இரா. நெடுஞ்செழியன் M.A., என்பவர் (பின்னர் மன்னிப்பு கேட்டுக்கொண்டாலும்) 'குர்ஆன் 1952க்குப் பொருந்துமா?' என்று கேட்டவர்களில் ஒருவர். இவருடைய பாஷையில் மனிதனுக்கு வேண்டியதெல்லாம்,

"பொருளாதார துறையிலே சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி செய்தல்;

"சமுதாயத் துறையிலே பேதமற்ற, பிற்போக்குத் தன்மையற்ற முற்போக்கு சமூகத்தை உருவாக்குவது''

என்பவைகளே [illegible] ஸோஷியலிஸ்ட்களும் [illegible]

182109

எல்லா அரசியல்-பொருளாதார நிபுணர்களும் கூறுவதெல்லாம் இவ்வளவே!

விளங்கச் சொல்லின், மதத்தின்—கடவுளின்—வேத சாஸ்திரங்களின் பேரிலும், தேசத்தின் பேரிலும், நிறங் காரணமாகவும், பிறவி காரணமாகவும், மொழியினாலும் பரம்பரை காரணமாகவும், பழக்க வழக்கங் காரணமாகவும், தொழில் காரணமாகவும், உடல் கூற்றின் வேறுபாடு காரணமாகவும், அதாவது இனம் காரணமாகவும், பொருளாதாரங் காரணமாகவும், சுருங்கச் சொல்லின், பிறவியால் மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு கற்பிக்கப்படக்கூடாது, என்பதே இவர்களின் இலட்சியம்.

இந்த இலட்சியத்தை, அதாவது; மனிதனுக்கு மனிதன், மனிதனுக்கும் மனுஷிக்கும் மத்தியில் பிறவியால் வேற்றுமை பாராட்டாமல், அவரவர்கள் சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம், குறைந்த அளவு தேவைக்கேற்ற வசதி, அனைவருக்கும் வாழ்க்கையின் உச்ச ஸ்தானத்தை அடைய சமசந்தர்ப்பம், அளிக்கும்படியான விதி விலக்குகளைக் கொண்ட சட்ட திட்டங்களே எக்காலத்துக்கும், மனித வர்க்க மனைத்துக்கும் பொருந்தும் என்றேற்படுகின்றது.

இஸ்லாம் = குர்ஆன்

மேலே கண்ட இலட்சியத்தைப் பூர்த்தி செய்யக்கூடிய விதி விலக்குகளைக் கொண்டுள்ளதா? என்பதே கேள்வியாகையால், அதுபற்றி மட்டும் கவனிப்போமாக. மற்ற மத வேதங்களோ, குறளோ, இந்த இலட்சியங்களைப் பூர்த்தி செய்யும்படியானதாக அமைந்துள்ளனவா வென்பது கேள்வியல்ல.

இஸ்லாத்தின் தாவாவுக்கு சாட்சிகள்.

இஸ்லாத்தின், அதாவது குர்ஆனின் கட்சிக்கு சாட்சியாக, அதாவது ஆதாரமாக குர்ஆன் 1952க்கு, அதாவது எக்காலத்துக்கும், எல்லோருக்கும் பொருந்தாது என்பவர்களை முதலில் பேசும்படி செய்துவிட்டுப் பின்னர் குர்ஆனையே தன் தாவாவை தானே விவாதிக்கும்படி செய்து அறிவாளிகளின் தீர்ப்புக்கு விட்டு விட விரும்புகின்றேன்.

......

குர்ஆன் 1952க்குப் பொருந்துமா?

என்று கேட்ட

ஈ. வெ. ரா. பெரியார் கூறும் சாட்சி.

....★....

ஈ. வெ. பெரியார்

முதல் சாட்சியாக குர்ஆனுக்காக—குர்ஆனைப்பற்றி பிரமாணம் செய்து கீழ்கண்டவாறு சொல்லுகின்றார்.

"கடவுளும், மதமும், சட்டமும், மக்கள் அனைவரையும் சமமாகப்பாவிக்கவேண்டும் என்பது தான் திராவிடக் கழகத்தின் கருத்து"

இவ்வாறு பெரியார் 6-7 வருஷங்களுக்கு முன் தென் ஆற்காடு கள்ளக்குறிச்சி திராவிட பகுத்தறிவாளர் மகா நாட்டில் தலைமை வகித்துக் கூறியதாகும். (இதை எழுதும் நான் இப்படியும், இன்னமும் விளக்கமாக இஸ்லாத்தைக் குறித்துப் பெரியார் கூறியதை நேரில் கேட்டு ஓரளவுக்கு ஏமாந்து போய்தான்,

'திருச்சி முஸ்லிம் ஊழியர் மகாநாடு' மேற்கண்ட காரணங்களுக்காக திராவிடர் கழகத்தின், நம் நாட்டு முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ளதும், நமக்கு அவமானமாக உள்ளதுமான (1) பிறவியால் உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் எதையும் ஒழிப்பதற்கும், (2) இதரர் சுரண்டல், ஆதிக்கம் முதலியவைகளை நீக்குவதற்கும், 'ஒன்றே தேவன்—ஒன்றே இனம்' என்ற அடிப்படையில் கையாளும் எல்லா நேர்மையான முயற்சிகளிலும் பங்கெடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கிறது"

என்ற ஒரு தீர்மானத்தை, 28-12-47 ல் திருச்சியில் நடந்த திருச்சி முஸ்லிம் ஊழியர் மகா நாட்டுக்கு 10-12-47ல் அனுப்பி வைக்கத் தூண்டப்பட்டேன். (இ. இ. வெ. 28 பாருங்கள்.)

பெரியார் இவ்வாறு அப்பொழுது இஸ்லாத்தின் கடவுளும் மதமும், குர்ஆன் சட்டங்களும் இறுதிநபியவர்களும் உலகனைத்துக்கும் போதுமானவை என்றே பேசி வந்தார். (இதற்கிடையில் கூட்டத்தில் கோவிந்தா வென்று இஸ்லாத்தையும் மறைமுகமாகவும், ஜாடை மாடையாகவும் தாக்கி வந்தாலும், இது நாணயமான முறையல்லவானாலும்) அவர் வெள்ளையாக பஹிரங்கமாக இஸ்லாத்தைப்பற்றிக் கூறிய சாட்சியங்களை கீழே தொகுத்துக்கொடுக்கின்றேன்.

மேலும், இவர் இஸ்லாம் எக்காலத்துக்கும் பொருந்தும் என்பதற்காகக் கூறுவ

தை நிஷ்பட்சபாத மற்ற மனத்துடன் கவனித்துப் படியுங்கள். இஸ்லாம் என்றால் குர்ஆனைத் தான் குறிக்கும் என்பதையும் மறந்து விடாதீர்கள்.

இஸ்லாம் என்றால் முஸ்லிம்களை, அவகர்ளின் நடை உடை பாவனைகளைக் கொண்டு கணிக்கக்கூடாது.

இஸ்லாமைத் தோற்றுவித்தவர் இறுதி நபி யெனப்படும் முஹம்மது நபியவர்களும் அல்ல என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இஸ்லாம் இயற்கை மதம். இயற்கையை ஒட்டியதே இஸ்லாம் என்பதையும் போகப்போக இந்த சாட்சியின் மூலியமாகவே, அதாவது பெரியாரின் கூற்றுகளிலிருந்தே தெரிந்து கொள்ளுவீர்கள்.

இந்த இயற்கை மதத்தின் உண்மை வெளிப்படாதபடி மனிதன் தன் சேஷ்டையாலும், சுயநலமிகளும், சூழ்ச்சியாளரும் தங்கள் சுயநலத்துக்காகவும் மூடி வைத்திருந்ததால், குர்ஆன் மூலியமாக இஸ்லாம் என்றால் என்ன, மனிதனுக்கு அவன் கடமை என்ன, அவன் உரிமை என்னவென்பதையெல்லாம் எடுத்துக்காட்டி, குர்ஆனைத் தன் சொல்செயல்களால் வியாக்யானம் செய்து இஸ்லாத்தை பின் எவரும் திருத்தவேண்டிய அவசியமில்லாதபடி நிலை நாட்டிச் சென்ற பெருமை இறுதி நபியவர்களுக்கு உண்டே ஒழிய, கிறிஸ்து மதத்தை இயேசு கிறிஸ்துவும், புத்த மதத்தை புத்தரும் தோற்றுவித்தது போல இஸ்லாத்தை முஹம்மது நபி தோற்றுவித்தார் என்று பெரும்பாலார் நினைப்பதும், பல சரித்திராசிரியர்கள் எழுதியதும், இன்றைய பாட புத்தகங்களில் அப்படிக் குறிப்பதும் சுத்த மடமை— அறியாமை— ஆராய்ச்சி அற்றதனமாகும். இந்த விஷயத்தில் பெரியார் நன்றாக ஆராய்ந்து உண்மையைத் தெரிந்துள்ளார் என்பதை அவர் வாக்கு மூலம் மூலமாகவே தெரிந்துகொள்ளுங்கள்.

இஸ்லாம் கண்டவர் முஹம்மத் நபி அல்ல.

“இஸ்லாம் என்றால் முகம்மது நபிகள் மதம் என்றோ, இங்கு லுங்கிக் கட்டிக் கொண்டு, அளந்த தாடி வைத்துக்கொண்டு இருக்கும் சாயபு, ராவுத்தர், மரைக்காயர், மாப்பிள்ளை என்கின்றவர்கள் மதம் என்றோ கருதி விடாதீர்கள்”

என்று இரத்னச் சுருக்கமாய் முஸ்லிம்களிலும் பெரும்பாலார் வெட்கப்படும் முறையில் சொல்லிவிட்டு,

திராவிடர் மதம் இஸ்லாமே

என்பதை விளக்குகையில்,

‘‘திராவிடர்கள் மதம் முஹம்மது நபிக்கு முன்பு, கிறிஸ்து நாதருக்கு முன்பு, புத்த மகானுக்கு முன்பு,

ஆரியர்களுக்கு கிருஷ்ணன், ராமன், சிவன், விஷ்ணுக்களுக்கு முன்பு திராவிடர்களுக்கு இருந்த மதமாகும் இஸ்லாம் என்பது"

என்று முஸ்லிம்களும் ஏனையோரும் ஆச்சர்யப்படும் முறையில் உண்மையைப் பேசியுள்ளார். ஆம், நாம் முன்னரே கூறியபடி பைபிளில் வரும் ஆதாம்(=ADAM=ஆதம் அல்ல.) குர்ஆனில் வரும் ஆதம் (=ஆதமி) மனிதனுக்கு, 'தான் யார், என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது' என்ற உணர்ச்சி தோன்றிய காலத்திலிருந்து 'இஸ்லாம்' தோன்றியது என்பதே குர்ஆன் கூற்று. திராவிடர்கள் ஆதி மனிதர்கள் என்றால், அவர்கள், பெரியார் கூற்றுப்படி, இஸ்லாத்தை ஏற்று நடந்து வந்தார்கள்; 'திராவிடர்களின் மதம் இஸ்லாம் தான்' என்பதில் யாருக்கென்ன பிணக்கிருக்கமுடியும்? மேலும்,

இஸ்லாம் என்பது என்ன?

வென்பதையும் அவர், பெரியார் வாய் மூலியமே தெரிந்து கொள்ளுங்கள்.

"இஸ்லாம் என்பது சாந்தி, பணிவு, பக்தி என்று பொருள்படும் அரபுச் சொல்"

என்று நேரிடையான பொருளைக் கொடுத்துவிட்டு, அது எதற்காக தோற்றுவிக்கப்பட்டது, அதன் இலட்சியமென்ன வென்பதை விளக்கும் பொழுது,

"இஸ்லாம் என்பது சகோதரத் தன்மை என்பது"

என்று ஒரே வாக்கியத்தில் கனகச்சிதமாய் விளக்கிவிட்டுள்ளார்.

தமிழில்–திராவிட பாஷையில் இஸ்லாம் என்றால் என்ன?

வென்பதையும் பெரியாரே,

"அரபு வார்த்தையில் சொல்லாமல் தமிழில் ஒரு கடவுள், உருவமற்ற கடவுள் வழிபாடு, சாந்தி, ஒற்றுமை, பரஸ்பர பணிவு, பக்தி, உடன்பிறப்பு, என்ற தன்மைகள் கொண்ட மதம்(தான் இஸ்லாம் என்பது). 100, 200 வருஷத்துக்கு முற்பட்ட அகராதிகளைப் பாருங்கள், (உண்மையை விளங்கிக் கொள்ள)."

என்று கூறி விட்டு.

அல்லா என்றால் என்ன? திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுளல்ல 'அல்லா' வென்ற இஸ்லாமிய கடவுள்

என்று கீழ்கண்டவாறு கூறுகின்றார்.

"கடவுள் என்பது திராவிடமொழி, காட் (GOD) என்பது ஆங்கில மொழி, 'அல்லா' என்பது அரபு மொழி, என்பதல்லாமல் திராவிடர்களுக்கு மாறுபட்ட கடவுள் அல்ல, கொள்கை அல்ல, (இஸ்லாத்தின் அல்லாவும்—கொள்கையும்)"

இன்றைய முஸ்லிம் வேறு இஸ்லாம் வேறு

என்பதை விளங்கிக்கொள்ளாமல்

தாடி லுங்கியைக் கொண்டு இஸ்லாத்தை நிர்ணயித்து குர்ஆன், அதாவது இஸ்லாம் 1952-க்குப் பொருந்தாது என்று கூறுவது மடமை என்று எச்சரிப்பான் வேண்டி, அதே பெரியார்,

“மதங்களை விபூதிப் பூச்சு, நாமம், உச்சிக்குடுமிகளைக் கொண்டு நிர்ணயிப்பது போல், இஸ்லாத்தை, தலைமொட்டை, தாடி, லுங்கி, முதலியவைகளைக் கொண்டு நிர்ணயிக்காதீர்கள்”.

என்று கூறியது, M.A. படித்த நெடுஞ்செழியனையும், ஆலிம்—மௌலவிகளெனப்படும் முஸ்லிம் சாஸ்திரிகளையும் கண்டிப்பது போல் இருக்கின்றது.

இஸ்லாத்தை எப்படி நிர்ணயிப்பது?

என்பதையும் பெரியாரே விளக்குகின்றார்.

“இஸ்லாத்துக்கு எஜமானர் இந்த நாட்டு முஸ்லிம்(களும், ஆலிம் மௌலவிகளெனப்படும் இஸ்லாமியப் பண்டிதர்களும்) அல்ல. இவர்கள் இஸ்லாத்தின் ஒரு பகுதியினர். மலையாள மாப்பிள்ளைகள் மற்றோர் பகுதியினர். ஈஜிப்ட்டார் மற்றோர் பகுதியினர். ஜப்பான் ஜெர்மன் இஸ்லாமியர்கள் இன்னொரு பகுதியினர். ஆப்ரிக்கர், நீக்ரோவர், அபிசீனியர் ஆகிய இஸ்லாமியர் மற்றோர் பகுதியினர்.

“இவர்கள் இத்தனை பேருக்கும் ஒரு கடவுள், அதுவும் உருவம், பெண்டு பிள்ளை, சோறு சாறு வேண்டாததும், அற்றதுமாகும். உடன் பிறப்பு, சமஉரிமை, கட்டுப்பாடு இவைதான் (உலகனைத்துள்ள எல்லா நிற-இட-தேச முஸ்லிம்களுக்கும்) பொது.

“மற்றவை எல்லாம் கால தேசவர்த்தமானங்களைப் பொறுத்தது.

“இவை ஒன்றாய் இருப்பதால் தான் 60 (இல்லை 70 to 80 கோடி) மக்கள் உலகில் எந்தப் பாகத்திலும் இருந்தாலும் உடன் பிறப்பாய் இருக்கிறார்கள்”

இந்த இஸ்லாத்தின் எதிரி தன் சாட்சியங்களில், இஸ்லாம் இயற்கையை ஒட்டிய மதம் என்றும், இஸ்லாம் தான் திராவிடர்களின் மதமாக இருந்திருந்ததாகவும், இஸ்லாம் உலகத்தில் எங்கும் அநுஷ்டிக்கக் கூடியதாக அமைந்திருப்பதால் தான் எல்லா கண்டங்களிலும் எல்லா இன-நிற-தேசத்திலும் இஸ்லாமியர்கள் உள்ளனரென்றும், எத்தேசத்திலிருந்தாலும், அவர்களைக் கட்டுப்படுத்தும் இயற்கையை ஒட்டிய சட்ட திட்டங்கள் இஸ்லாத்தில்=குர்ஆனில் பொருந்திருப்பதனால் தான் அவர்களை கட்டுப்பாடாக இருக்கும்படி செய்வதாகவும், தெளிவான—நாணயமான பாஷையில் விளக்கிவிட்டு, அதே சமயத்தில் தன் சொந்த மதமாகிய இந்து மதம் இஸ்லாத்துடன் ஒப்பிட லாயக்கற்றதும் தீமையைப் பயக்கக்கூடியதும் என்று விளக்குவான் வேண்டி,

மாகிய இந்து மதம் இஸ்லாத்துடன் ஒப்பிட லாயக்கற்றதும் தீமையைப் பயக்கக்கூடியதும் என்று விளக்குவான் வேண்டி,

“(இஸ்லாமியர்களாகிய) இவர்களுக்கு உலகம் நடுங்குகிறது. நீங்கள் இந்து என்றால் உங்கள் 15 கோடி மக்களுக்கு எது பொது? எங்கே மானம்? எங்கே உடன்பிறப்பு? எங்கே ஒற்றுமை? எங்கே மனிதத் தன்மை? எங்கே கட்டுப்பாடு? கோபித்து ஆத்திரப்பட்டு என்ன செய்வது?”

என்று வெள்ளையாக, எதிர்ப்புக்கஞ்சாமல் கூறியுள்ளார், இல்லை, எழுதி சவால் விட்டுக்கொண்டுள்ளார். சந்தேகப்படுபவர்கள். இ. இ. ப. க்கு எழுதி ஆதாரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குர்ஆனில் மூட நம்பிக்கை யில்லையா?

வேறு, இஸ்லாம், அதாவது ‘குர்ஆன் 1952-க்கு மட்டுமல்ல உலகத்துக்கு எக்காலத்துக்கும் பொருந்தும்’ என்ற குர்ஆனின் வாதத்துக்கு ஆதாரமாக இஸ்லாத்தின் எதிரியே ஆகிய மேற்படி பெரியார் கூறிய சாட்சிகளாலும் திருப்தி பெறாத வீணர்கள் கேட்கலாம். கேள்வியெல்லாம், இஸ்லாம் “1952-க்கு அதாவது உலகனைத்துக்கும் எக்காலத்துக்கும் பொருந்துமா?” என்பதே அல்லாமல் குர்ஆனில் மூட நம்பிக்கை இல்லையா வென்பதல்ல என்பதை மட்டும் மறந்து விடாதீர்கள்.

கடவுள் உண்டு என்பது நாஸ்திகர்களுக்கு மூட நம்பிக்கையாக இருக்கலாம். ஆனால், மெய்ஞானிகளுக்கு அது மூட நம்பிக்கையல்லாதது மட்டுமல்ல, அது இன்றியமையாததுமாகும். அறியாதவனுக்கும், அறிய ஆற்றலில்லாதவனுக்கும், அறிய விரும்பாதவனுக்கும், எல்லாம் மூட நம்பிக்கையே ஆகும். உலகம் உருண்டை, சுழல்கின்றது என்பது, உண்மையானாலும் அக்காலத்து மேதாவிகளுக்கும் கூட இது கற்பனை-மூட நம்பிக்கை என்றே தோன்றியது. அவர்கள் பிரத்யட்சமாகக் காணவிட்டாலும், உணர்ந்த பிறகு அது மூட நம்பிக்கை அல்லவென்பது விளங்கிற்று. அது போலவே பிரத்யட்சமாக ஒவ்வொருவரும் ஒவ்வொன்றையும் பார்க்கவோ, உணரவோ முடியாதவர்கள் எப்பொழுதும் இருந்துகொண்டு தான் இருப்பர். இது போன்றவர்களுக்கு எடுத்ததிலெல்லாம் சந்தேகம் பிறக்கலாம். உண்மையைத் தெரிந்துகொள்ளவும், உணர்ந்து கொள்ளவும் விருப்பமும் முயற்சியும் அற்று இருந்து கொண்டே, சந்தேக வினாக்களைக் கிளப்பிக் கொண்டிருப்பவர்களைத் தான் வீணர்கள், விதண்டாவாதிகள் என்பது. இப்பொழுது,

குர்ஆனில் மூடநம்பிக்கையில்லையா? என்று இந்த வீணர்கள் கேட்கலாம். முன்னரே, கேள்வியெல்லாம், ‘குர்ஆனில் மூட நம்பிக்கைகளில்லையா? என்பதல்ல, குர்ஆன் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியதுதானா?’ என்பதே என்று எச்சரிக்கப்பட்டிருந்தாலும், குர்ஆன் எக்காலத்துக்கும்

பொருந்தும் என்பதற்கான சாட்சியங் கூறிய ஈ.வெ.ரா. பெரியாரே, இந்த வீணர்கள் குர்ஆனில் வரும் மோட்சம்-நரகம், பாப புண்யம், முதலிய சூட்சும உலக விஷயங்களைப் பற்றி உணராமல் இந்த வீண் கேள்விகளைக் கேட்டு விஷயத்தைக் குழப்பிக்கொண்டிருக்க இடங் கொடுக்கக் கூடாது என்று எண்ணி போலும்,

மதம் இல்லாமல் மக்கள் வாழமுடியாது,

"அதாவது நான் சொல்லும் மதம், கடவுளுக்கும் மக்களுக்கும் சம்பந்தமும், மோட்சமும், விதியும், மன்னிப்பும், சன்மானமும், மேல் லோகத்தில் அளிப்பது என்கின்ற மதம் அல்ல.

"மற்றெதுவென்றால், மனிதனுக்கு மனிதன் மரியாதையாய், (பணிவாய்), அன்பாய், பக்தியாய், சாந்தியாய், சகோதரத் தன்மையாய் ஒற்றுமையாய், ஒழுக்கமாய், உதவியாய் வாழும் கொள்கை உங்களுக்குப் புரிவதற்காக மதம் என்ற பழக்க வார்த்தையில் சொல்லுகின்றேன். இதைச் சமுதாயக் கொள்கை என்று சொல்ல எனக்கு இஷ்டம். இதை நீங்கள் மதம் என்று சொல்லவேண்டும் என்றாலும், ஆட்சேபிக்கவில்லை. இப்படிப்பட்ட "மதம்" இல்லாமல் மனிதன் சமுதாயத்தில் வாழுவது சங்கடப்படும். ஆகையால், இந்த நாட்டில் (மேலே கண்ட இந்த (உன்னத)க்கொள்கையின் பேரால் ஏற்கனவே ஒன்றுபட்டு வாழும் 10 கோடி (இஸ்லாமிய) மக்களுடன் நாம் திராவிடர்கள் 4 கோடிப் பேர் ஒரு கொள்கை(யுடைய இஸ்லாமி)யினராய் வாழ்ந்து, மானம் பெற்று, ஈனம் ஒழிந்து, மனிதத்தன்மை உரிமையுடன் வாழ்ந்தால் யாருக்கு என்ன நஷ்டம், என்ன இழிவு," என்று கேட்கின்றேன்"

என்று கேட்டு வீணர்களுடைய வாயை அடைத்து, அறிவாளிகளின் சிந்தனைக்கு சவால் விட்டுள்ளார். இப்பொழுது சிந்தித்து முடிவுக்கு வாருங்கள், பகுத்தறிவுவாதிகள் என்று விளம்பரப்படுத்திக்கொள்ளும் பெரியார் சிஷ்யர்களே!

இன்னமும் நுணுக்கமாய் இஸ்லாமை ஆராய்ந்து குர்ஆன் அதாவது இஸ்லாம் உலகனைத்துக்கும் பொருந்துமென்றால், அதன் பொருள் என்னவென்பதையும் விளக்குகையல்,

திராவிடத்தில் இஸ்லாம்

எப்படிப்பட்டதாய் இருக்கும்? என்ற கேள்வி பிறந்தால், அதற்கு பதிலாக,

"திராவிட நாட்டில் நாம் (அனைவரும்) இஸ்லாம் (மதத்தை ஏற்றுக்கொண்டு முஸ்லிம்களாக) ஆனால் நம் இஷ்டப்படிதான் இங்குள்ள சூழ்நிலையை ஒட்டித்தான்) இஸ்லாம் இருக்குமே தவிர,

யாரோ, சாயபோ, (முஸ்லிம்களின் மூடத் தனத்தை வளர்த்து சோம்பேரியாக வயிறு வளர்க்கும் இஸ்லாமிய சாஸ்திரிகளாகிய ஆலிம்—மௌலவி எனப்படும்) முல்லாவோ சொல்லுகிறபடி இஸ்லாம் இருக்காது. எனக்கு 10 நாட்டு முஸ்லிம்கள் அனுசரிக்கும் இஸ்லாமும் தெரியும். (அடிப்படையை பாதிக்காத விபரங்களில்) நாட்டு இஷ்டம்—மெஜாரிட்டி இஷ்டம் தானே தவிர, இந்து மதம் போல்-- எட்டி நில், நீ படிக்க முடியாது, நீ சூத்திரன், நீ வேசி மகன், உனக்கு சமத்துவம் இல்லை, உத்தியோகம் இல்லை, அதாவது பணிவையும், சாந்தியையும், உண்மை சகோதரத்துவத்தையும் கொள்கையாய்க் கொண்ட மார்க்கம் (இஸ்லாம்). மற்றது எது எப்படி இருந்தாலும் ஒற்றுமை கட்டுப்பாடு கொண்ட மார்க்கம் (இஸ்லாம்). இதை யாரும் மறுக்க முடியாது."

என்று ஆணித்தரமாகக் கூறி உள்ளதை, குர்ஆன் எக்காலத்துக்கும் பொருந்துமா? வென்று சந்தேகிக்கும் பெயர் வழிகள் ஊன்றி கவனிப்பார்களாக.

இன்னமும் திருப்திபடையாதவர்களே,

"இஸ்லாத்தைச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் இங்கிலாந்து, ஈஜிப்ட், துருக்கி சென்று வாருங்கள்"

என்று உபதேசிக்கின்றார். சரி தானே! அப்பொழுது தான் இஸ்லாம் எல்லா தேச மக்களுக்கும் எப்படி பொருந்தியதாக இருக்கின்றது என்பது விளங்கும். இங்கிலாந்தியர்கள் வெள்ளையர்கள், ஆரியர்கள், உலகத்தில் நாகரீகத்தில் உச்சஸ்தானத்தை அடைந்தவர்கள், விஞ்ஞானம் பெற்றவர்கள். எகிப்தியர்கள் அரபிகள், அரபிகளும் நீக்ரோவர்களும் கலந்தவர்கள், கருத்தவர்களும் மாநிறத்தவர்களுமாவர். இவர்கள் கிறிஸ்துவர்களாகி இருந்து முஸ்லிமானவர்கள். துருக்கியர்கள் வேறு இனத்தவர்கள், அரபிகளல்ல, டார்ட்டார்கள். இஸ்லாத்தில் படிந்திருந்த தூசி துப்புகளைக்களைந்துவிட்டு, இஸ்லாத்தில் இடையில் புகுந்து கொண்ட புல்லுருவிகளாகிய புரோகிதக் கூட்டத்தினரை ஒழித்துக் கட்டிவிட்டு, இஸ்லாத்தைத் தூய்மைப்படுத்தியவர்கள். இவ்வாறு மாறுபட்ட இனத்தினருக்கும், நிறத்தினருக்கும், தேசத்தினருக்கும், ஈரோப்பியனுக்கும், ஆப்பிரிக்கனுக்கும், ஏஷியனுக்கும், கி. பி. 611 ல் புதுப்பிக்கப்பட்ட இஸ்லாம்; இன்றைக்கும் 1952 லும், இந்த 1400 வருஷங்களாகப் பொருந்தக்கூடியதாக இருக்கும் ஒன்று, ஒரு மார்க்கம், எக்காலத்துக்கும் பொருந்தும் என்று குர்ஆன் தாவா செய்து கொண்டிருப்பதில் ஆச்ச

ர்யப்படுவது ஆராய்ச்சியின்மை அல்லது 'தன் குஞ்சும் போன் குஞ்சு' என்ற தன்மையுமாகுமே யல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? சிந்தித்துப் பார்த்து முடிவு கட்டுங்கள்.

இன்னமும், குர் ஆன் அதாவது இஸ்லாம், (திராவிடர்களுடையது மட்டுமல்ல,

> உலக) "இழிவு நீங்க இஸ்லாம் என்கிற மந்திரம் தான் நம்மை மனிதராக்க முடியும். இதை நான் இன்று சொல்லவில்லை, நேற்று சொல்லவில்லை. 1919, 1920 முதலிலிருந்து இன்று வரை 28 வருஷங்களாகச் சொல்லி வருகின்றேன்."

என்று கூறுபவரும் இந்தப் பெரியார் ஈ. வெ. ரா. தான். இவர், 1952க்கும், எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியது இஸ்லாம் என்ற மார்க்கம் தான் என்று தக்க சான்றுகளுடன் கூறியதுடன் நில்லாது, உலக இழிவு, சிக்கல் அனைத்தையும் தீர்க்க வல்லதும் கூட இஸ்லாம் ஒன்று தான் என்று கூறி விட்டு, உலக இழிவு நீங்க

> "இஸ்லாத்தைத் தவிர்த்து வேறு மருந்து இல்லை, இதுவரை எந்தப் பெரிய (கிறிஸ்து, புத்தர், ஆரிய சமாஜ், சீக்கிய, அல்லது வள்ளுவர் முதலிய) வைத்தியனுடைய எந்த மருந்தும் தோல்வியையே அடைந்து விட்டது."

என்று தன் அநுபவ முடிவை சொல்லி கீழ்கண்டவாறு, சிந்தனையாளர்களுக்கு,

> என் அன்புள்ள திராவிடச் சகோதரனே! (உன், என், உலக) இழிவு, சிக்கல்கள் தீர இஸ்லாத்தைத் தவிர ஒரு மருந்து சொல். இப்போதே சொல்லாதே. விடு போய் தமிழ்ப்பெரியார்கள், சர் (Sir) பட்டம் பெற்ற) பெரியார்கள், பண்டிதப் பெரியார்கள்; ஆங்கிலம் கற்றுப் பதவி வகிக்கும் வக்கீல், உத்தியோகப் பெரியார்கள், முதலானவர்களுடன் கலந்து, கட்டி அழுது முடிவு கண்டு நாளைக்குச் சொல்"

என்று 18—3—47 ல் சவால் விட்டு இன்றைக்கு 5-6 வருஷங்களாகியும் வேறு மருந்துண்டு என்று யாரும் சொல்லவில்லையே! இனியாவது சொல்லுங்கள், மேலும் ஆராய்வோம்.

திராவிடனுக்கு வேண்டியது இஸ்லாம்

மேற்கண்டவாறு பெரியார் 'இஸ்லாத்தைத் தவிர்த்து வேறு மருந்துண்டானால் காண்பிப்பார்களாக' என்று 18-3-47 ல் விட்ட சவாலுக்கு இது வரை வேறு மருந்துண்டு என்று காண்பிக்காவிட்டாலும், முன் விவரித்தபடியான வீணர்களின் விதண்டா வாதங்களுக் கெல்லாம் பதில் கூறும் முகத்தால்,

"சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இஸ்லாம் ஒரு கடவுள், ஒரு ஜாதி அதாவது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அடிப்படையைக் கொண்டது"

"இந்த அடிப்படை திராவிடனுடையது. திராவிடனுக்கு வேண்டியது (இஸ்லா]ம் என்றும் சொல்லலாம்."

என்று உபதேசித்து விட்டு, திராவிடர் மட்டுமல்ல,

"இஸ்லாம் மதத்தை எல்லா மக்களும் அனுசரித்தால் பிராமணர் என்கின்ற ஜாதியே சமுதாயமே இரா. பல கடவுள்களும், விக்கிரக உருவக் கடவுளும் இருக்கமாட்டா. இந்த விக்கிரகக் கடவுளுக்குப் படைக்கும் பொருள் விரயமும் நின்றுபோகும்"

என்று திட்டவட்டமாய் இஸ்லாம் என்ற மருந்தை எல்லா மக்களுக்கும் சிபாரிஷ்செய்துள்ளார்.

ஆனால், இந்த மருந்தை, (இஸ்லாத்தை) ஏன் ஹிந்து, கிறிஸ்து, சீக்கிய புத்தரனைவரும் ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன் வெறுக்கவும் செய்கின்றார்கள் என்பதற்கு, பெரியாரே காரணம் கூறுகின்றார். வேறு எந்த மதமும் மார்க்கமும் அளிக்காத அளவுக்கு இஸ்லாம் சமதர்மத்தையும் சகோதரத்துவத்தையும் அமலில் கொண்டு வந்து எங்கும் பறவி, ஏனைய மதங்கள் பரவாதபடி செய்து வருவதால் இஸ்லாம் ஏனையவர்களால் வெறுக்கப்படுகின்ற உண்மையை உணர்ந்த பெரியார் அவர் தன் பாஷையில்,

"இஸ்லாமியர்கள் மீது பல (அபாண்டப்) பழிகள் சுமத்தி மக்களுக்குள் வெறுப்புணர்ச்சி ஊட்டப்பட்டு வருகின்றது".

(என்றாலும், தங்கள் மருந்து (மதம்) மதிக்கப்படவில்லை, அறிவாளிகளுக்குப் பொருந்தவில்லை யென்ற பொறாமை காரணத்தால்,)

"இஸ்லாத்தைப் போல் கிறிஸ்து மதம், சீக்கிய மதம், ஆரிய சமாஜம், பிரம சமாஜம், பௌத்த சமாஜம் முதலியவை இந்துக்களால் வெறுக்கப்படுவதில்லை"

"ஏன் என்றால், கிறிஸ்து, சீக்கிய முதலிய மதங்களும் இஸ்லாத்துக்கு ஒரு அளவுக்கு விரோதமானவைகளாதலால், இவை இஸ்லாத்தின் பொது விரோதிகள் என்கின்ற முறையில் இந்து, கிருஸ்துவர், சீக்கியர் ஆகிய மூவருக்குள் விரோதமில்லாமல் கூடிய வரை ஒற்றுமையாகவும் இருக்கிறார்கள்"*

என்றும் விளக்கியுள்ளார்.

குர்ஆன், அதாவது இஸ்லாம் 1952-க்குப் பொருந்தாது என்று கூறுபவர்கள் நம்நாட்டு நாஸ்திகர்களே ஆகையாலும்,

---

* 'நம் நாடு உருப்பட வேண்டுமானால் — —' என்ற இ. இ. வெளியீட்டில் விபரம் காணலாம்.

சமீப காலமாக குர்ஆனைவிட சிறந்தது ‘திருக்குறள்’ என்று விளம்பரங் கொடுப்பவர்களும் அந்த நாஸ்திகர்களும், பிராமண துவேஷங் கொண்ட ஆஸ்திக இந்துக்களுமே ஆகையால், குறளைப்பற்றி அதிகமாகப் பிரச்சாரம் செய்துவரும் நாஸ்திகர்களின் தலைவர் பெரியார் குறளைப்பின் பற்றச் சொல்லுகின்றாரா, அல்லது குர்ஆனைப் பின்பற்றச் சொல்லுகின்றாராவென்பதையும் கொஞ்சம் விளக்கமாக சொல்லிவிட வேண்டியிருக்கின்றது.

குறளைப் பின்பற்றுவதால் இழிவு நீங்கும்,

என்று அவர் நினைக்கவில்லை. வேத சாஸ்திரங்களை அழிப்பதாலும் கோரிய பலன் கிடைக்கும் என்றும் நினைக்கவில்லை. இந்து மதத்தை விட்டு விலகி நாஸ்திகன் என்றழைத்துக் கொள்ளுவதாலும் இழிவு நீங்குமென்று அவர் கூறுவதில்லை. கிறிஸ்துவர்—புத்தர் ஆவதாலும் பலன் கிடைக்காது என்கின்றார். திராவிடஸ்தான் பிரிந்துவிடுவதாலும் இழிவு ஒழியாது என்கின்றார். பின்னர் எதனால் கோரிய பலனனைத்தும் மந்திரத்தில் மாங்காய் கிடைப்பது போல் கிடைக்கும் என்றால் குர்ஆன் மதத்தை ஏற்றுக்கொண்டால் எல்லா இழிவுகளும் நீங்கும் என்கின்றார். அவர் பாஷையில் அவர் சொன்னதையே அப்படியே கீழே தொகுத்துக் கொடுக்கின்றேன் பார்த்துக் கொள்ளுங்கள்.

“என் மீது கோபிப்பவர்கள் (நம் இழிவு நீங்க இஸ்லாத்தைத் தவிர்த்து வேறு மருந்துண்டென்று) பரிகாரம் சொல்லாமல் கோபித்தால் அவர்களை வெறும் வெறியர்கள் என்று தானே அறிவாளிகள் சொல்லுவார்கள்”

என்று முன்னுரையாகக் கூறி விட்டு, தொடர்ந்து

“கோபிக்கும் தோழர்களே!

1) வேத சாஸ்திரங்களை, புராண இதிகாசங்களை நெருப்பிட்டுக் கொழுத்துவதால் சூத்திரப் பட்டம் ஒழியப் போவதில்லை.

2) கோவில்களை இடிப்பதாலோ விக்கிரகங்களை உடைத்து தூளாக்குவதாலோ, சூத்திரப்பட்டம் ஒழியப் போவதில்லை.

3) திராவிடன் என்று சொல்லிக்கொள்வதால் மாத்திரம் சூத்திரப்பட்டம் ஒழியப்போவதில்லை.

4) இன்றைய நிலைமையில் நான் இந்துவல்ல என்று சொல்லிக்கொண்டாலும் சூத்திரப் பட்டம் ஒழியப்போவதில்லை. இந்து மதம் இலேசில் ஒழியாது. அது பச்சோந்தி போல் சுலபத்தில் சாகும் மதமல்ல. அதைச் சாகடிப்பதற்கு நம் ஆயுளும் நம் பேரன்மார் ஆயுளும் கூடப் போதாது.

5) ஆகவே நாம் அதை (இந்து மதத்தை) விட்டு விலக்குவதுதான் நம் ஆயுளில் முடி

யக்கூடிய காரியமாகும்.
7) அந்தப்படி நாம் விலகினோமேயானால் நாம் யார் என்று சொல்லிக்கொள்ள இன்றைய நிலைக்கு ஒரு பெயர் வேண்டும். அதைப் புதிதாக உண்டாக்கவேண்டும், பரப்பவேண்டும். அதை இன்றைய காந்தி சர்க்கார் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும். அதற்குச் சட்டம், சம்பிரதாயம் செலாவணி ஏற்பட வேண்டும். அதற்கு உண்டான பிரதிநிதித்துவம் உரிமை நிர்ணயித்து ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும். இவ்வளவும் செய்வதென்றால் பார்ப்பன எதிர்ப்புக்கும், சூட்சிக்கும் பனியாக்கள் ஆதரவுக்கும் முன்னால் சுலபத்தில் ஆகக் கூடியதா? நம் செல்லிக்காய் மூட்டை சமுதாயத்தால் நினைக்கக்கூடியதா? என்பதையும் சிந்தியுங்கள்.

என்று எழுதிவிட்டு, சுத்த நாணயமாய், நூற்றுக்கு நூறு உண்மையை

"பிறகு இப்படி எல்லாம் இல்லாமல் இந்தக் கஷ்டங்களுக்கும், முடியாமைக்கும் ஆளாகாமல் ஏற்கனவே ஏற்பட்டு,

உலகம் பூராவும், செல்வாக்கும் செலவாணியும் பெற்று, எவரும் சிந்தித்துச் சிந்தித்து ஒப்புக்கொண்டு அமலில் இருந்து வருவதும், நமது உண்மையானதும், உரிமையானதுமான கொள்கையை கொண்டதுமாய் இருக்கும் சமுதாய சமத்துவ சமயத்தை (அதாவது இஸ்லாமை) "நான் தழுவிக்கொண்டேன்" என்று சொல்வதில் என்ன தப்பு, என்ன கஷ்டம் என்பதையும் சிந்தித்துப் பாருங்கள்."

என்று சிந்தனைக்கு வேலை கொடுத்திருக்கின்றார். நானும் உங்களை சிந்திக்கச் சொல்லுகின்றேனே ஒழிய உங்கள் தந்தை சொல்லி விட்டதால் உடனே இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள சொல்லவில்லை. சிந்தித்துப் பாருங்கள், மேலும் சிந்தித்துப் பாருங்கள், இன்னமும் சிந்தித்து முடிவுக்கு வாருங்கள் என்று தான் சொல்லுகின்றேன்.

முடிவுரையாக,

"இஸ்லாம் என்றால் உங்களுக்குக் கசப்பும் கோபமும் ஏற்படக் காரணம் என்ன? — உங்கள் சூத்திரப் பட்டம் இழிவு நீங்க, உங்கள் காலத்தில் நீங்க, ஏதாவது (இஸ்லாத்தைத் தவிர) ஒரு வழி சொல்லுங்கள்"

"என் அபிப்பிராயத்தை நான் சொன்னேன். உங்கள் அபிப்பிராயத்தை நீங்கள் சொல்லுங்கள். வாதம் பிரதிவாதம் செய்து கொண்டு வம்பளந்து கொண்டே இருந்து வரும் காலம் கடத்தி— சூத்திரனாக,—பின் சந்ததிகளையும் சூத்திரனாக இருக்கும்படி விட்டு விட்டுச் சாவதா? — — எனவே யோசியுங்கள், தயவு செய்து ஆழ்ந்து கவலையோடு யோசியுங்கள். (பிறந்த) — மத அபிமானம் என்னும் வெறியை விட்டு, மான அபிமானம் வைத்து, யோசியுங்கள், கோபியாதீர்கள். மற்றொரு முறை சிந்தியுங்கள்"

என்று சொல்லுவதும் சொன்னதும் "இன்றைக்கு குர்ஆன் அது எந்த தேசத்துக்கும் பொருந்தியது என்றால் விஞ்ஞானியால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்?" என்று கேட்ட ஈ. வெ. ரா. பெரியாரே என்றால் உங்களுக்கு வியப்பாகத் தோன்றவில்லையா? இப்படிக் குர்ஆனைக் குறை கூறுபவர்களுக்கு எங்கேயோ—ஏதோ கோளாறு இருக்கத்தான் வேண்டுமென்று கூட உங்களுக்குத் தோன்றுகின்றதல்லவா?

விஞ்ஞானி என்றால் விசேஷ ஞானத்துடன் விஷயங்களை அளந்து, நிறுத்து, சிந்தித்துப்பார்ப்பவனே தவிர்த்து விசேஷ அல்லது அதிசிய அல்லது தெய்வீகப் பிறவியல்ல. பெரியார் இதுவரை இஸ்லாத்தைப் பற்றி கூறிய சாட்சியிலிருந்து,

> இஸ்லாம் அதாவது குர்ஆன் எல்லோருக்கும் எக்காலத்துக்கும் பொருந்தியதாக இருப்பதனால் தானே—இருக்கின்றது என்று எடுத்துக் காட்டித் தானே திராவிடர்களனைவரும் ஏககாலத்தில் இஸ்லாமியர்களாகி விடவேண்டும் என்று வற்புறுத்தி பின்னிப் பின்னி யோசனை கூறினார்! அல்லவா? அவர் வாதமெல்லாம் ஒரு கை தேர்ந்த தர்க்க வாதி- அநுபவ விஞ்ஞானியைப் போன்றதல்லவா?

ஆம், என்றால் இப்பொழுது, அவரே "குர்ஆன் எந்த தேசத்துக்கும் பொருந்தியது என்றால் விஞ்ஞானியால் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்?" என்று கேட்கின்றார் என்றால், இப்படி முன்னுக்குப் பின் நேர் முரணாகக் கேட்கும் அவர்தான் விளக்கம் கொடுக்கவேண்டும். அதுவரை பொறுத்திருப்போம்; பின் இதார் சாட்சியை அவசியமானால் அழைத்துப் பரிசீலிக்கலாம்.

“1952-க்கு குர்ஆன் பொருந்துமா” என்று கேட்ட மற்றவர் M.A., பட்டதாரியாகிய நெடுஞ்செழியன். இவர், தான் அப்படிக் கேட்கவில்லையென்றும், தான் கேட்டதில் தப்பான அர்த்தம் கற்பிக்கப்பட்டதென்றும், அப்படியே அர்த்தம் ஏற்பட்டாலும் அதற்காக மன்னிக்கவேண்டுமென்றும் நெடுஞ்செழியனும், அவருடைய தலைவர் அண்ணாதுரையும் கேட்டுக்கொண்டு விட்டதால் இந்த சாட்சியை அழைக்கவேண்டியதவசியமில்லை. அவசியமானால் போகப் போக அழைத்து விசாரிக்கலாம்.

இறுதியாக,

பெரியாரின் கூற்றால் இஸ்லாம், அதாவது குர்ஆன் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடியதாக அமைந்திருக்கின்றது, என்பதாக ஏற்பட்டதே ஒழிய, **குர்ஆன் 1952க்குப் போருந்தாது என்பதற்காக மறைமுகமாவது ஒரு வாக்கியம் உண்டா?** என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

[பெரியார் 1953 அக்டோபர் 2-3 தேதிகளில் ஆத்தூர் சு. ம. & தி. கழக மகா நாட்டுக்குத் தலைமை தாங்க வருவதால், அவருக்கு இ. இ.ல் வெளிவந்த இதை அன்பளிப்பாக சமர்ப்பிக்க அவசரம் அவசரமாக தொகுக்கப்பட்டது, அவர் இதுபற்றி மேற்கொண்டும் விளக்கம் கொடுக்கவேண்டுமென்றவேண்டுகோளுடன்.]

182109

39	குறளும் குர்ஆனும் — —?		6
40	அடிமைப் பெண்ணை மணக்கலாகாதா?	(கு.வி.5)	8
41	ஹிந்துக்களை மணக்கக்கூடாதா?	(கு.வி.6)	6
42	முஸ்லிம் பெண்கள் ஹிந்துக்களை ஏன் மணக்கலாகாது?	,,7)	6
43	காதல் மணம். இதை குர்ஆன் தடுக்கின்றதா? ('என் மனைவி உனக்கு' என்ற கதையுடன்.)	(கு.வி.8)	6
44	தேர்தலும் முஸ்லிம்களும்		2
45	திராவிடர் கழகமும் இஸ்லாத்தின் விரோதியே		2
46	கோஷா-பர்தா-முகமூடி——?	(கு.வி.9)	6
47	கோஷா-பர்தா-ஜெயில் வாசம்—?	(கு.வி.10)	14
48	இந்துயிஸம்-இஸ்லாம்-கம்யூனிஸம்———?		அச்சில்
49	இஷாத்தே இஸ்லாம்-மாதத்தாள்-வருஷசந்தா		1-12
50	கர்ப்பத்தடை-இதை இஸ்லாம் தடுக்கின்றதா?	(கு.வி.11)	6
51	குர்ஆன் 1952க்குப் பொருந்துமா?		அச்சில்
52	புத்தமதமும் இஸ்லாமும்— —?		3
53	நம் தேசம் உருப்பட வேண்டுமானால் — —?		8
54	பன்றியும் இஸ்லாமும் — —?	(கு.வி.12)	அச்சில்
55	தி.மு.கழகமும் இஸ்லாமும் — — —.		,,
56	தீண்டாமை ஒழிய ஒரு தந்திரமும் மந்திரமும்		,,
57	தேர்தல் முறை ஆட்சியும் இஸ்லாமும்		,,
58	'ஈமான்' - கடவுள் நம்பிக்கை அவசியந்தானா?		,,
59	'நம்மூர்' — மாத மிருமுறை — வருஷ சந்தா		20
60	மஸ்ஜித் முன் மேள தாளம் ஏன் கூடாது?		5
61	ஈ. வெ. ரா. வுக்கு ஆஸ்திகர் அழைப்பும் — —		அச்சில்
62	அஹமதியமும் இஸ்லாமும்		,,
63	முல்லா இஸ்லாமும்—இஸ்லாமும்		,,
64	தொழுகையும் மொட்டைத் தலையும்		,,

வினா:-

இ. இ. வெளியீடுகளை ஏன் கட்டாயம் வாசிக்கவேண்டும்?

விடை:-

"முஸ்லிம் பெண்கள் விபச்சார தோஷமுள்ள அடிமைகள் தானா?" என்ற நூலுக்கு மதிப்புரையாக,

"நமது குலாம் சாஹிப் பெர்னார்ட்ஷா போன்ற நோக்கமுடைய ஓர் நவீன சீர்திருத்தக்காரர். இவரது நூல்களை கட்டாயம் ஒவ்வோர் முஸ்லிமும் படித்து அறியவேண்டும்."

"அறிவை அபிவிருத்தி செய்ய நினைப்பவர் இப்படிப்பட்ட இஷாத்தே இஸ்லாம் பிரசுரங்களை வாங்கி வாசிக்க புத்தி கூறுகிறோம் — — —." என்று,

'இஸ்லாமிய தாரகை'

20—6—47 ல் எழுதியது

உண்மையா என்பதைப் பரிட்சிக்க.

பகுத்தறிவுப் பயிற்சிப் பண்ணை

பதி		கிரயம் அணா
1	118 பகுத்தறிவுப் பயிற்சி வினுக்கள்	4
2	ஹிந்து-முஸ்லிம் பிணக்கு வளராதிருக்க யோசனை ×	இனும்
3	பிராமணர்களின் எதிர்காலம் by Dr. Capt. N. கிருஷ்ண ஸ்வாமி அய்யர் M.B., B.S., Cas I.	8
4	பிராமணர்களின் எதிர்காலமும் கலப்பு மணத்தின் அவசியமும் (காந்தி, நேஹ்ரு, C. R. உள்பட பல ஜாதி-மத-கொள்கை கொண்ட 30-க்கு மேற்பட்ட அறிவாளிகளின் சாதக பாதகமான அபிப்பிராயங்களடங்கியது).	12
5	லஞ்சமும் அது ஒழிய மார்க்கமும்...சர்க்காருக்கு யோசனை	10
6	சமூகப் போரும் அராஜகமும் ஒழிய .... ,, ...	4
7	மதுவிலக்கு வெற்றி பெற கூட்டபாரதம் ... ... ,, ...	4
8	தீண்டாமையும் ஜாதியும் ஒழிய சேரிகளை அழித்துவிடவும் ,,	6
9	கடவுள் என்பது எதை? by Dr. M. E. நாயுடு, L R C P & s (Edin,) L E P & s (Glasgow,) ~~L M (combe-dublin)~~	8
10	கடவுள் என்பது எதை? by A. க்ரெஸ்ஸே மாரிஸன், ந்யூயார்க் விஞ்ஞானக் கழகத் தலைவர்.	8
11	தேர்தலில் யாரை ஆதரிப்பது? ×	2

வியாபார நிபந்தனைகள்.

1) V P P கிடையாது. தபால் செலவுடன் முன்பணமனுப்பிவிட வேண்டும்.

2) 10 ரூபாய்க்குக் குறையாத ஆர்டர்களுக்கு $6\frac{1}{4}$ முதல் 50% வரை கழிவு கிடைக்கும். விபரத்துக்கு எழுதுங்கள்.

3) கையிருப்பில்லாத நூல்களுக்குப் பதிலாக வேறு புத்தகங்கள் அனுப்பப்படும்.

4) திராவிட கழகங்களுக்கும், முஸ்லிம் சங்கங்களுக்கும், மாணவர்களுக்கும், சு. ம. இயக்க முஸ்லிம்களுக்கும் பாதிவிலை.

5) குறைகளை எடுத்துக்காட்டி எழுதுவதாக வாக்களிக்கும் ஆலிம்களுக்கு இனும். தபால் செலவை இவர்கள் முன்கூட்டி அனுப்பிவிடவேண்டும்.

6) 'இஷாஅத்தே இஸ்லாம்' சந்தாதாரர்களுக்கு முக்கால் விலை.

7) பதில் விரும்புவோர் தபால் பில்லை அனுப்பவேண்டும்.

8) × இந்த அடையாளங்களுள்ள நூல்கள் கையிருப்பில்லை.

மானேஜர், இ. இ. ப., 'ஹாஜிஜி ஸன்ஸ்,' ஆத்தூர், சேலம்.